KALANILAYAM தனிப்பிரதி ரூ. 0 3 0

கலாநிலயம்

A Literary Weekly

வியாழன்தோறும் வெளிவரும்.

வருஷ சந்தா
உள் நாடு ரூ. 7 8 0
புற நாடு ரூ. 9 0 0

காரியாலயம்:—
வேளாளர் தெரு,
புரசைபாக்கம் சென்னை.

Vol 4.] 1931ஆம் மே மீ 14உ [No. 19.

பொருளடக்கம்.

1. தலையங்கம் (Leader) 361
2. அப்பர் (64-கலை-யோகம்)
E. N. தணிகாசல முதலியார் B.A. B.L. 363
3. சூளாமணி - (இரதநூபுரச் சருக்கம் - 59—75)
K. இராமரத்நம் ஐயர் B.A. 365
4. பிஸாரோ நாடகம் - (அங்கம்-5, களம் 1 & 2.)
R. B. Sheridan 368
5. கம்ப ராமாயணம் (நகர் நீங்கு படலம்)
T. N. சேஷாசலம் B.A. B.L. 371
6. யாப்பிலக்கணம் (தொடை - எதுகை) 374
7. வண்மையின் வரம்பு (சிறுகதை)
V. T. சுந்தரலிங்கம் B. A. 376
8. வர்த்தமானம் 379

கலாநிலயம்

இருமன முடையோர்க் கொரு சொல்.

கடவுளைப்பற்றிக் கருதுங்கால் மனிதர் இருமனத்தவரா யிருந்திருக்கின்றனர். நம்மைப் படைத்து, நுகர்தற்குரிய நலங்களை யளித்து, தாயொக்கு மன்பினோடு காத்து, சென்று சேர்தற்கோர் நற்கதியையும் அமைத்து, கருணை யென்னும் தண்ணறும் பொழிலில் வளர்க்கின்ற பெருமானை உள்ளத்தால் உன்னி யுன்னி உருகுவார் ஒரு சாரார். எனினும், அப்பெருமானை வழிபட்டு ஒழுகும் நாளிடை, தம் மனமொழி மெய்கள் இறைவனை மறுத்துஞ் சதிகள் சில செய்து விடுகின்றன. இந்தச் சதி நேர்ந்தபின், அவரது ஆவி அஞ்சுகின்றது. அஞ்சி, "இறைவா, என் வாழ்க்கை யடங்கலும் உனக்கே யான் முறைசெய்ய வேண்டியவனாக இருக்க, அதற்கு மாறாக, சில நினைப்பதுஞ் சொல்வதுஞ் செய்வது மாயினேனே. இனி உன் முன் வந்து யான் என்ன உத்தரஞ் சொல்லுவேன்" என நாணி மிக நடுங்குவார் அவர். இவ்வண்ணம் துணுக்கமெய்தற்கு அவர் செய்த குற்றம் மிகப் பெரியதாயிருக்கவேண்டும் என்று எண்ணவேண்டா. தம்பால் கண்ட மிகச்சிறு குறையையும் பெரியதாய்க் கருதிப் பரிபவர்களே பெரியோர் என இலக்கணங் கூறலாம். சிறியசிறிய குற்றங்களை எத்துணைக்கெத்துணைப் பெரிய பாவங்களாகப் பெருக்கி மனமழிகின்றாரோ அத்துணைக் கத்துணை அவர் பெரியவராகின்றார். இப்படிப் பார்க்குங்கால் மற்றவர்க்கெல்லாம் குணமாய்த் தோன்றுமொன்று, பெருமையின் எல்லையை யுங்கடந்தவர் எனத் தகுந்தவர்சிலர்க்குக் குற்றம் போல் உள்ளத்தை உறுத்த நேரினும் நேரும். கடவுளிடத்தில் பக்தியுடைமையை ஒரு குற்றமென எவருங் கருதார். ஆனால், காளத்தியப்பனைத் தரிசிக்கச்சென்ற பட்டினத்துப்பிள்ளையார், "சிறுத்தொண்டர் திருநீலகண்டர் கண்ணப்பர் அனைய நாயன்மார்களைப்போல், "இன்னதென் றியம்புதற் கறியாவொருஇயற்கையன்பினால் உன்னை உட்கொண்டு நின்றதொரு அரியநிலை அடையாமல், நீ யென்றும் நானென்றும் நானுன்பால் பக்தியுடையவனா யிருக்கின்றேனென்றும் நினைவுவைத்து வருகின்றேனாதலின் நான் உன்முன்வந்து ஆளர்வதெப்படியோ, திருக்காளத்தி யப்பனே" என்று ஏங்கி யேங்கிக் கையறவு எய்தினாரன்றோ! "நீயே நான் என்று நினைப்பும் மறப்பும் அறத் தாயேஅனைய அருள்தந் தாய் பராபரமே" என்று தாயுமானவர் வழுத்திய வாசகத்திலும், நினைப்பும் மறப்பும் அற்றதென்னும் நினைவேனும் உளதென்னும் குறையே காண்பார் பட்டினத்தடிகள் போலும். இன்னபடி நுணுகி நூற்கவல்ல குற்றங்கள் கிடக்க, மனிதர் புரிகின்ற கருமங்கள் பலவற்றிற்குத் தம் கடவுள்முன் நேரே பதில் சொல்ல வேண்டியவர்களா யிருக்கின்ற நிலைமைகள் எத்தனையோ பல; அத்தனைக்கும் அஞ்சுகின்றார் பலர். எவ்வளவு கடைகெட்ட கயவன்மாட்டும் இவ்வச்சம் ஒருபோ தல்லாக்கால் ஒருபோது தோன்றாமல் இராது. கிறிஸ்தவ வேதத்தின் வாசகப்படி கூறுங்கால், "அம் மாபெரும் நியாயாதிபதி முன்னிலையில் விசாரணைக்குச் சென்று நிற்கக் கூசாத மாந்தர் இலர்" என இயம்புவது அமையும்.

இது ஒரு மனம். வேறோர்வகை மனமும் உளது. அது இதனிற்கு நேர் எதிரானது. 'கடவுள் நமக்கு என்ன பதிற்சொல்லப் போகின்றார்' என்று கேட்பார் மறுசாரார். துன்பம் வறுமை நோய் பிணி பகை பற்பல பாவங்கள் மரணம், யாவற்றையும் உலகத்தில் அளவின்றிக் காணுங்கால் மானுடமனந் தடுமாறுகின்றது. நம்மைப் படைத்தாளும் கடவுளின் கருணை இதுவோ காண், என மலைகின்றனர். கருணையென்பது கண்டறியான்கொல் அக்கடவுள் எனத்திகைப்பதும் ஒருவாறு இயற்கைபோல் தோன்றுகின்றது. ஒருபாவமும் அறியாப் பச்சைக் குழந்தைகள் மிகப் பெருந்துன்பங்களுக்கு ஆளாவதைக் காணுங்கால், கடவுளின் நீதி அயிர்க்கப்படுகின்றது. அருமந்த மகவை அளித்துப் பின் அதனை மாய்த்துக்கொண்டு போகின்றபோது தாங்கமாட்டாத்துயரோடு நைகின்ற தாயினை நோக்குவார் ஈரமுடைய நெஞ்சினாராயின், "என்ன கருணையிது, என்ன நீதி இது' எனக் கடவுளை நொந்துரைக்காமல் அகல்வது அருமை "முன் பிறப்பில் என்ன பாவஞ் செய்தேனோ, எனக்கித் துன்பம் வந்தெய்தியது" என அவ்வன்னை ஒருகால் உள்ளந் தேறினும் தேறலாம். மற்றவர்களோ ஆற்றமாட்டார். ஆங்கில அறிஞர் ராபர்ட் லூயி ஸ்டீபன்ஸன் (R. L. Stevenson) என்பவர் இயம்பும்வண்ணம், நம்திறத்தில் விவகரிப்பதைக்காட்டிலும் கடவுள் மற்றவர்திறத்தில் விவகரிக்கின்ற விதங்களே அவருடைய நீதியில் நமக்குள்ள நம்பிக்கையை அசைத்துவிடுகின்றது. முன்செய்த பாவத்தால் பின்னிது விளைந்ததென்றால், பாவத்தை யேன் படைத்தார், பாவத்தைப் படைத்தாலும் அதனைச் செய்யாமல் ஏன்காக்கவில்லை, என்பனவனையவினாக்கள் எழுகின்றன. அவனன்றியோரணுவும் அசையாதாதலின், நம்மனத்துள்ள காமக்குரோதாதிகளை இயக்குபவனும் அவனேயன்றோ. இவ்வண்ணம் நம்மைப் படைத்துப் பாவங்களைச் செய்வித்துத் தண்டனைகள் விதிக்கின்ற வன்கண் உடையகடவுளே அன்றோ எமக்குத் தக்க உத்தரஞ் சொல்லவேண்டியவராயிருக்கின்றார், என்னும் வெகுளி எஞ்ஞான்றும் சிற்சிலர்க்கு இருந்துளது.

வெவ்வேறு மதங்கள் இதற்கு வெவ்வேறு விதங்களில் சமாதானங்கள்கூறும். அவைகளை இங்கு ஆராய்வது இக்கட்டுரையின் நோக்கமன்று. முந்நூறு ஆண்டுகளுக்குமுன் இங்கிலாந்தில் ஷேக்ஸ்பியருக்கு அடுத்தபடிஎனக் கருதப்படும் பெருங்கவி ஜான் மில்டன் (John Milton) என்பவர், கடவுள் மனிதனிடத்தில் நடந்துகொள்ளும் வழி நீதியே என நிலைநிறுத்துமாறு சுவர்க்க நீக்கம் (Paradise Lost) என்றொரு பெருங்காவியம் பாடினார். கடவுள், ஆதாம் ஏவாள் என்னும் நம் இருமுதுகுரவரைப் படைத்துச் சுவர்க்கத்தில் வைத்து, அங்குள்ள 'அறிவுத்தரு' என்னுமொரு மரத்தின் கனியைத்தவிர மற்றெல்லாவற்றையும் நுகரலாமென்று விதித்து விட்டிருந்தாரென்றும், அச்சமயம், தேவகணத்திற்குத் தலைவனாயிருந்தவன் பொறாமையால் கடவுளையே வென்று அப்பதவியைத் தான் பெறவேண்டுமென்னும் பேரவாவுடன் மற்றுஞ்சில தேவர்களைத் தன்னோடு கட்சி சேர்த்துக்கொண்டு அக்கடவுள்மீது போர்தொடுக்க அவர் ஓர் இடியினால் அத்தேவனை அவன் படையினோடு பாதாளத்தில் தள்ளிவிட்டாரென்றும், மறுபோர் செய்து கடவுளை வெல்வதென்பது அரிதெனக் கண்ட அத்தேவன், அவர்செய்த படைப்புக் காரியத்தைக் கெடுத்தேனும் தன் பழியைத் தீர்த்துக்கொள்ளக் கருதி ஒரு பாம்பின் உருவம்எடுத்துச் சுவர்க்கத்தினுள் வந்து, ஏவாளின் மனதைப் பற்பல வஞ்சனை வார்த்தைகளால் கடவுளின்கட்டளைக்கு விரோதமாகக் கலைத்து, விலக்கப்பட்டிருந்த அம்மரத்தின் கனியைத் தின்னும்படி தூண்டவே, அவள் அவ்வஞ்சனைக்கு ஆளாகித் தானுந்தின்று தன்நாயகனுக்குங் கொடுத்தாளென்றும், இதுதான் பாவத்திற்குஉற்பத்தியென்றும், இவ்வாறு தன் கட்டளையைமீறியதால் கடவுள் மிகுந்த கோபங்கொண்டு அப்பாவத்தை அவர்கள் தலையில் சுமத்திச் சுவர்க்கத்தைவிட்டுத் துரத்திவிட்டாரென்றும், அந்த ஆதாம் ஏவாள் என்பவர்கள்தம் சந்ததியாகிய நம்மையும் அப்பாவம் சூழ்ந்துகொண்டிருக்கின்றதென்றும், அதனாற்றான் துன்பத்திற்கும் மரணத்திற்கும் நாம் ஆளாகிக் கிடக்கின்றோமென்றும் விரித்துரைக்கின்றது அக்காப்பியம். எனினும், நாம் நல்லொழுக்கமுடையவர்களாய் இருந்து கடவுளிடத்தில் மன்றாடினோமாயின் நம்முடைய பாவங்களைக் கடவுள் மன்னிப்பார் என்ற நம்பிக்கையையும் அந்நூல் அளிக்காமற் போகவில்லை. ஆம்.....முதலிற் பாவத்தைத் தன் சிருஷ்டியினுள் கடவுள் புகுத்தியதேன் என்னும் ஐயம் மாறுவது அருமை. பாம்பாக வந்து அந்தக் கபவன் நம் அன்னை ஏவாளை வஞ்சிக்கும்படி கடவுள் ஆதியில் விடுவானேன் ? மனமிருந்தால் அவரால் அதனைத் தடுத்திருக்கத்தான் இயலாதோ. 'பாபத்தைப் படைத்துவிட்டு, அதனைச் செய்யாமலிருந்தால் மன்னிப்பேன்—துன்பமோ நீ படத்தான் வேண்டும், என்பது நீதியாகுமா, என்னப் பின்னும் பின்னும் வினவிப் பேதுறும் மாந்தர் மனம். பர்ஷியாதேயத்துக் கவி ஓமர் கயாம் (Omar Khayyam) என்பவர் இவ்விடயத்தை மிகவும் பொருத்தமான சொற்களால் கேட்கின்ற பாசுரங்கள் இரண்டு இங்கு உரைத்தற் குரியன:—

Oh Thou, who didst with pitfall and with gin
Beset the Road I was to wander in,
  Thou will not with Predestined Evil round
Enmesh, and then impute my Fall to Sin!

O Thou, who man of baser Earth didst make,
And Even with Paradise devise the Snake:
  For all the Sin wherewith the Face of Man
Is blackened—Man's forgiveness give—and take.

ஆதலால், கடவுள் நமக்குப் பதில் சொல்ல வேண்டியவரா யிருப்பதோடு நில்லாமல், அவர் நம்மை மன்னிக்கு மளவிலேயே, நம்முடைய மன்னிப்பையும் அவர் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்கின்றார் அப் பாரஸீகக் கவி.

இப்படி இருமனப் பட்டிருக்கு மக்களுக்கிடையே திருநாவுக்கரசுநாயனார் தோன்றி ஓர் அரிய இரகசியத்தைத் தெரிவிக்கின்றார்—செம்மாந்து செப்புகின்றாரவர்:—

என்னை ஏதும் அறிந்திலன் எம்பிரான்
தன்னை நானும்முன் ஏதும் அறிந்திலேன்
என்னைத் தன் அடியான் என்று அறிதலும்
தன்னை நானும் எம்பிரான் என்று அறிந்தேனே

ஈசனை அறியமாட்டாமையால் ஏசவில்லை அப்பர். அவன் தன்னை இதுகாறும் அறியாதிருந்ததற்குச் சிறிது சிரித்துப் பிறகு அவன் தன்னை யறிந்ததும் தானும் அவனை அறிந்ததாகப் பெருமிதம் பாராட்டுகின்றார். அதுவும் என்ன பெருமிதம் - ஒரு அடியானின் பெருமிதமே. ஈசுவரனை அறிவினால் விசாரிக்கப் புகுவதெல்லாம் விபரீதமாய் முடியும். அவனைத் தேடி அடைய நாடுவதே ஆன்மாவிற் குரியது. அவ்வான்மாவை வந்தடைய அவ்வீசனும் ஆவலுடையவனாயிருக்கின்றான். இந்தப் பெருமையை உரைக்க வல்லார் தமிழிற்றெளிந்த குரவர்களே.

அப்பர்

அப்பரும் அறுபத்திஞன்கு கலைகளும்.

24. யோகம்

[354-வது பக்கத் தொடர்ச்சி]

8. இராஜ யோகத்தின் சிறப்பு அங்கங்கள்.

VI. சமாதி (தொடர்ச்சி)

யோகிகளின் நோக்கத்தை அநுசரித்துச் சமாதி இருவகைப்படு மென்பர் மேலோர்.

தன்னிற் றன்னை யறியும் தலைமகன்
தன்னிற் றன்னை யறியிற் றலைப்படும்

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 29.

என்று அப்பர் திருவாய்மலர்ந்தருளியவாறு உள்ளே திகழும் பரம்பொருளை உள்ளத்தினுள்ளே தன்னந் தனிச் சின்மாத்திரமாய்க் காணப்பெற்றுத் தரிசிப்பதையே சொரூப சமாதி யென்பர். இங்குப் புலன்களிற் புந்திநைந்து, அசுத்தமான மனம் மாண்டு ஞானப் பொருள் ஒன்றே காணப்படும். இங்குத் தலைவன் மனமே தன்மனதாய், நான், நீ யென்னும் பேதம் மாள நிற்கும்.

ஈச னென்னை யறிந்த தறிந்தனன்
ஈசன் சேவடி யேத்தப் பெறுதலால்
ஈசன் சேவடி யேத்தப் பெற்றேனினி
ஈசன் றன்னையு மியான்மறக் கிற்பனே?

மறக்கிற்பனே யென்னுந் திருக்குறுந்தொகை 4.

தாயுமானவரும் இந்நிலையை வேண்டுவது காண்க:-

பொறியிற் செறியைம் புலக்கனியைப்
புந்திக் கவராற் புகுந்திழுத்து
மறுகிச் சுழலு மனக்குரங்கு
மாள வாளா விருப்பனே
அறிவுக் கறிவாய்ப் பூரணமாய்
அகண்டா னந்த மயமாகிப்
பிரிவற் றிருக்கும் பெருங்கருணைப்
பெம்மா னேயெம் பெருமானே!

ஆசையெனும் 13.

இந்த நிலையில் ஜீவன் நாபியில் நிற்கும். பிராணன் என்னும்மூச்சுவிடுவதைத்தவிர வேறெந்தத்தேகதத்துவங்களும் காணப்படா. இதனை நனவிற் சுழுத்தி யென்னும் நிலையென்பார். நித்தமும் மக்கள் அநுபவிக்கும் மூடசுழுத்திபோல் அஞ்ஞான அந்தகாரத்தில் செல்லாது ஞானசோதியை அறிவுக்கறிவாய் அணுவுக் கணுவாய், சிந்தையவிழ்ந்து, ஆங்காரமற்று

“ இரவுபக லற்றவிடத் தேகந்த யோகம்
வரவுந் திருக்கருணை வையாய் பராபரமே ”

எனத் தாயுமானவர்கூறும் நிலையாம்இது. இந்நிலையில் நின்ற தாயுமானவர்,

சொல்லாய தகுதி யெல்லாங் கடந்து நின்ற
சொரூபானந் தச்சுடரே தொண்டனேனைக்
கல்லாகப் படைத்தாலு மெத்த நன்றே
கரணமுடன் நானுறவு கலக்க மாட்டேன்

என்பார். சொரூபசமாதியில் நமது அந்தக்கரணங்களான மனம், புத்தி, சித்தம், அகங்காரமென்னும் நான்கின் உறவு அற்றுப்போம். அவ்வளவு அற்றதே முத்தியென்னும் பேரின்ப பூமியாகும். திருஞான சம்பந்தர் இதைமிகவும் அற்புதமாய் விளக்குவதுகாண்க:-

பத்திப்பேர்வித்திட்டே பரந்தவைம் புலன்கள்வாய்ப்
பாலேபோகா மேகாவாய்பகையறும் வகைநினையா
முத்திக்கே விக்கத்தே முடிக்குமுக்குணங்கள்வாய்
மூடாவூடா நாலந்தக் கரணமு மொருநெறியாய்ச்
சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள்
சேர்வர்தாமே தானகச் செயுமவ னுறையுமிடம்
கத்திட்டோர் சட்டங்கள் கலந்திலங்கு நற்பொருள்
காலேயோவா தார்மேவுங் கழுமலவளநகரே.

இவ்வாறு யோகமார்க்கத்திலே சொரூபசமாதியான சிவயோகத்தின் பலனை அநுபவிப்பதையும் அணுவுக் கணுவாய்ச் சொரூப தரிசனம் காணப்படுவதையும் நம்பியாரூர் திருத்தினை நகரெனும் உருவகப்பேரும் பொருந்துமாறு அவர் சீர்காழித் திருப்பதிகத்தின் மூன்றாவது பாசுரத்தில் தன் சுவாநுபூதியை வெளியிடுவதைக் கவனிக்க:—

திருத்தினை நகருறை சேந்தனப் பனேன்
செய்வினை யறுத்திடும் செம்பொனை யம்பொன்
ஒருத்தனை யல்லதிங் காரையு முணரே
னுணர்வுபெற் றேனுய்யுங் காரணந் தன்னால்
விருத்தனைப் பாலனைக் கனவிடை விரவி
விழித்தெங்குங் காணமாட்டாதுவிட்டிருந்தேன்
கருத்தனை நிருத்தஞ்செய் காலனை வேலைக்
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே.

[குறிப்பு:—திருத்தினை நகரென்பது ஒரு சிவஸ்தலம். அதுபூர்வம் தினைப்பயிரால் பெயர்பெற்றதாம். தினையென்பது ஒருவகைச் சிற்றரிசி. இங்குச்சொரூப சமாதியில் அணுவுக் கணுவாய் அதிநுட்பமாய்க் காணும் சைதன்யப்பொருள், தினையே நகராயிற்றென்பது போல் உருவகத்திற்கு இடங்கொடுக்கும் நம்பியாரூரர் சொற்றொடர். சேந்தனப்பன் என்னும் சொல்லிலும் விசேடம் காணப்படுகின்றது. வேலினைக் கையிலேந்திய முருகக்கடவுள் தந்தை என்றுபொருள் தருதலால் வேலின் கூர்மைபோல் இச்சொரூப சமாதி கூடவேண்டுமென்றும், அங்ஙனம் கூடிய சமாதியால் செய்வினை முற்று மற்று அத்துவித நிலை சித்தியாமென்பதும் பொருள்படுமாறுசொற்கள் அமைந்திருப்பது காண்க.]

ஞானிகளின் சிறப்பவஸ்தைகளான துரியம், துரியாதீத மென்னும் இரண்டு ஞானவஸ்தைகளில் இது துரியாவஸ்தையாகும். இது இவ்வாறு விளைய நேர்ந்ததென்பதைத் தாயுமானவர் விளக்குவது காண்க:—

காராரும் ஆணவக் காட்டைக் களைந்துஅறக்
கண்டு அகங்கார மென்னும்
கல்லைப்பிளந்து நெஞ்சகமான பூமிவெளி
காணத் திருத்தி மேன்மேல்
பாராதி யறியாத மோனமாம் வித்தைப்
பதித்தன்பு நீராகவே
பாய்ச்சியது பயிராகு மட்டுமா மாயைவன்
பறவையணு காத வண்ணம்

நேராக நின்றுவிளை போகம் புசித்துய்ந்த
நின்னன்பர் கூட்ட மெய்த
நினைவின் படிக்குநீ முன்னின்று காண்பதே
நின்னருட் பார மென்றும்
ஆராரு மறியாத சூதான வெளியில்வெளி
யாகின்ற துரியமயமே
அண்டபகி ரண்டமு மடங்கவொரு நிறைவாகி
யானந்த மான பரமே.

தாயுமானவர் - ஆனந்தமானபரம்.

உன்னிலையு மென்னிலையு மொருநிலை யெனக்கிடந்
துள்ளிடு மவத்தை யாகி
உருவுதான் காட்டாத ஆணவமு மொளிகண்
டொளிக்கின்ற விருளென்னவே
தன்னிலைமை காட்டா தொருங்கவிரு வினையினாற்
றுவுசுக துக்க வேலை
தட்டழிய முற்றுமில் லாமாயை யதனாற்
றடித்தகில பேதமான
முன்னிலை யொழிந்திட வகண்டிதா காரமாய்
மூதறிவு மேலுதிப்ப
முன்பினெடு கீழ்மே னடுப்பக்க மென்னுமன்
முற்றுமா னந்த நிறைவே
என்னிலைமை யாய்நிற்க வியல்கூ ரருள்வடிவ
மெந்நாளும் வாழி வாழி
இகபர மிரண்டினிலு முயிரினுக் குயிராகி
யெங்குநிறை கின்றபொருளே

தாயுமானவர் - எங்குநிறைகின்றபொருள்.

இத்தகைய துரியாவஸ்தையின் இலக்கணத்தைத் திருநாவுக்கரசு நாயனார்,

நின்னாவார் பிறரன்றி நீயே யானாய்
நினைப்பார்கண் மனத்துக்கோர் வித்து மானாய்
மன்னானாய் மன்னவர்க்கோ ரமுதமானாய்
மறைநான்கு மானாயா றங்க மானாய்
பொன்னானாய் மணியானாய் போக மானாய்
பூமிமேற் புகழ்தக்கப் பொருளே யுன்னை
யென்னானாய் என்னானாய் என்னி னல்லா
ஏழையே னென்சொல்லி ஏத்துகேனே ?

தனித் திருதத்காண்டம் 7.

உருகுமனத் தடியவர்கட் கூறுந் தேனை
யும்பர்மணி முடிக்கணியை யுண்மை நின்ற
பெருகுநிலைக் குறியாளர் அறிவு தன்னைப்
பேணியவந் தணர்க்குமறைப் பொருளை பின்னு
முருகுவிரி நறுமலர்மே லயற்கு மாற்கு
முழுமுதலைமெய்த்தவத்தோர் துணையைவாய்த்த
திருகுகுழ லுமைநங்கை பங்கன் றன்னைச்
செங்காட்டங் குடியதனிற் கண்ட னானே.

திருச்செங்காட்டங்குடி - திருத்தாண்டகம் 3.

அண்ட மாரிருளூடு கடந்தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங் காரறிவார் அறிவா ரெல்லாம்
வெண்டிங் கட்கண்ணி வேதியனென்பரே.

சித்தத்தொகை - திருக்குறுந்தொகை 2.

திருநாவுக்கரசு நாயனார் பாடுவதெல்லாம் புராணப் போர்வையிற் காணப்பட்ட போதிலும், வெளியில் ஒரு பொருளும் உள்ளே ஞானார்த்தமான பொருளு மாயிருக்கின்றன. உதாரணம்—விடையேறுவான் சிவ னென்பர். பின்னர் மால்விடை யென்பர். அடியிற் கண்ட பாசுரத்தில் அவருடைய ஊர்தி யாதுஎன்று காணின் அஞ்ஞான பூமியினின்று ஞான பூமிக்குச் செலுத்தும் அறிவின் தன்மையன்றோ; அவ்வாறு அவ்வுணர்வால் காணப்படுவது துரியநிலையான தெய்வச்சுடரன்றோ. இவைகளை அடியிற்காணும் பாசுரத்தில் கவனிக்க:—

உரியா யுலகினுக் கெல்லாம் போற்றி
யுணர்வென்னு மூர்வதுடையாய் போற்றி
பெரியாய தேய்வச் சுடரே போற்றி
யேசுமா முண்டியு டையாய் போற்றி
யரியா யமரர்கட் கெல்லாம் போற்றி
யறிவே யடக்க முடையாய் போற்றி
கரியானுக் காழியன் றீந்தாய் போற்றி
கயிலைமலை யானே போற்றி போற்றி!

திருக்கைலாயத்திருமலை - போற்றித்திருத்தாண்கம் - 6

பொந்தையைப் பொருளா வெண்ணிப்
பொருக்கெனக் காலம் போனேன்
எந்தையே! ஏகமூர்த்தி!
யென்றுநின் றேத்த மாட்டேன்
பந்தமாய் வீடு மாகிப்
பரம்பர மாகி நின்று
சிந்தையுட் டேறல் போலுந்
திருச்சோற்றுத் துறைய னாரே.

திருச்சோற்றுத்துறை - திருநேரிசை 5.

ஆயுர்வேத வித்வான் B. V. பண்டிட், சத் வைத்தியசாலை,
நஞ்சன்கூடு பல்பொடி நஞ்சன்கூடு.
சோல் ஏஜண்டுகள்:- யுனைடெட் கன்ஸர்ன், பந்தர் தெரு, மதராஸ்.

குழந்தைகளுக்கு :
ஸ்ரீகர கஸ்தூரி மாத்திரை
கோரோசனை மாத்திரை
சித்ர தைலம்,
"பால சுதா" (Reg.)
அமிர்தாமலக தைலம்
குழந்தை கட்டிக்கும்
ஜ்வரக் கட்டிக்கும்

டானிக்குகள்:
சாவனப்பிராசா
திராக்ஷாபாக
பாதாமி ரசாயனம்
ஜீவஸுதா (Reg.)
பிருங்காமலக தைலம்
ஸ்பெஷல் மருந்து (15 நாட்ளுக்கு ரூ. (2-0-0) பிரான்சு:

டிப்போ, பம்பாய்
கல்கத்தா



மதுரை
காஞ்சீபுரம்.

தோலாமொழித்தேவர் இயற்றிய

சூளாமணி

[346-வது பக்கத் தொடர்ச்சி]

4. இரதநூபுரச் சருக்கம்.

176. காவியுஞ்செங் கழுநீருங்
கமலமுங்கண் விரிந்துநளி
வாவியுமண் டபமுமெழின்
மதனனையு மருட்டுமே
தூவிபருங் கிளியன்ன
சொல்லீர்நீர் துணையில்லார்
ஆவியுய்ந்துள் ளாராதல்
அரிதேயிவ் விளவேனில். 59.

காவியும்-கருங்குவளை மலரும், செங்கழுநீரும் கமலமும்-,கண் விரிந்து மகளிர் கண்ணையொத்து மலர்ந்து, நளி - செறிந்துள்ள, வாவியும் - தடாகங்களும், மண்டபமும்-அவற்றினிடையிலே யுள்ள நீராழி மண்டபங்களும், எழில்- தமதழகால், மதனனையும் மருட்டும் - மன்மதனையும் மனங்கலங்கச் செய்யும். தூவி அரும் கிளி அன்ன சொல்லீர் -(பசுமையான) சிறகையுடைய அரிய கிளியின் பேச்சை பொத்த சொல்லையுடையவர்களே, இளவேனில் - இந்த இளவேனிற் காலத்தில், நீர் துணை இல்லார் - எனக்கு நீங்கள் எப்படியோ அப்படித் தத்தம் மனத்துக்கினிய மனைவியராகிய துணையைப் பெறுதவர்கள், ஆவி உய்ந்து உள்ளார் ஆதல்-உயிர் பிழைத்திருந்தவர் ஆதல், அரிதே- மிகவும் அசாத்தியமானது.

கண் விரிந்து - இடமெங்கும் விரிந்து, என்றுமாம்.

வேறு

177. இன்னண மிளையவர் மருள வீண்டுசீர்
மன்னவன் வயந்தமாட் டருளி மாமணிக்
கன்னவில் புரிசையுட் கடவுட் காக்கிய
பொன்னவி றிருநகர் பூவொ டெய்தினன். 60.

ஈண்டு சீர் மன்னவன் -திரண்ட கீர்த்தியோடுகூடிய மன்னவன், இன்னணம்-இவ்வாறு, இளையவர் மருள- தனது தேவிமார் காதலால் மயங்கும்படி, வயந்தம் ஆட்டு அருளி - வசந்தகாலத்துப் பொழில்விளையாட்டைப் புரிந்தருளி, மாமணிக் கல் நவில் புரிசையுள் - பெரிய இரத்தினங்கள்பதித்த மதிலின் அகத்தே, கடவுட்கு ஆக்கிய - அருகதேவனுக்காக அமைத்த, பொன் நவில் திரு நகர் - பொன்னாற்செய்த அழகிய கோயிலினுள்ளே, பூவோடு - அருச்சனைக்குரிய பூக்களோடு, எய்தினன் - சென்றான்.

வயந்தம் மாட்டு - வயந்தகாலத்தினிடத்து, இளவேனிலின் மாட்டு, என்றுமாம். பூவொடு - பொலிவுடன், என்றுமாம்.

---

178. உலமுறை தோளின னுவகை கூர்ந்தனன்
குலமுறை வழிபடுந் தெய்வக் கோயிலை
வலமுறை வந்தனன் வரலு மாமணிக்
கலமுறை கதிர்நகைக் கபாடம் போழ்ந்ததே. 61.

உலம் உறை தோளினன் - திரண்ட கல்லின் தன்மையைக்கொண்ட தோள்களையுடைய அரசன், உவகை கூர்ந்தனன் - மகிழ்ச்சி மிக்கவனாய், குலம் முறை வழிபடும் - தன் குலத்து முன்னோர் பரம்பரையாக வழிபட்டு வரும், தெய்வக்கோயிலை - அருகக்கடவுளின் கோயிலை, வலமுறை வந்தனன் - பிரதக்ஷிணம் செய்து முன்பக்கம் வந்தான்; வாலும் - வந்ததும், மா மணி கலம் உறை கதிர் நகை - பெரிய இரத்தினபரணங்களினிடத்தே தங்கியகிரணங்களின் ஒளியோடு கூடிய, கபாடம் - கதவு, போழ்ந்தது - திறப்புண்டது.

உலம் - திரண்ட பெரியகல். கலம் - கலன், அணிகலன். நகை - ஒளி. 'போழ்ந்தது' என்று தன் வினையாக இருப்பினும் பிறவினையாகக்கொள்க.

---

179. பிணிநிலை பெயர்ப்பன பிறவி தீர்ப்பன
மணிநிலை விசும்பொடு வரங்க ளீவன
கணிநிலை யிலாத்திறற் கடவுட் டானக
மணிநிலைச் சுடரொளி மலர்ந்து தோன்றவே. 62

பிணிநிலை பெயர்ப்பன - சீவான்மாக்களின் துயரங்களையெல்லாம் நீக்குவனவும், பிறவி தீர்ப்பன - பிறவித் துன்பத்தை ஒழிப்பனவும், மணி நிலை விசும்பொடு - அழகிய அழியாப் பதவியாகிய சுவர்க்க லோகத்தோடு, வரங்கள் - விரும்பிய இதர வரங்களையும், ஈவன - தருவனவும் ஆகிய, கணி நிலைஇலாத்திறல் - அளவிட்டு அறிதற்கரிய எட்டுக்குணங்களோடு கூடிய, கடவுள் - அருகக்கடவுளின், தானகம் மணிநிலை சுடர்ஒளி- இருப்பிடமாகிய அழகிய பீடத்தின் பிரகாசிக்கும் காந்தி, மலர்ந்து தோன்ற - பரந்து வெளிப்பட.

திறல் - கடையிலா அறிவு, கடையிலாக்காட்சி, கடையிலாவீரியம்,கடையிலாஇன்பம், நாமம்இன்மை, கோத்திரம் இன்மை, ஆயுள் இன்மை, அந்தராயங்கள் (இடையூறுகள்) இன்மை, என சமண நூல்கள் கூறும் இறைவனுடைய எண்குணங்கள். தானகம் - தானம், பீடம்.

---

180. மெய்ம்மயி ரெறிந்தொளி துளும்பு மேனியன்
கைம்முகிழ் முடித்தடங் கதழச் சேர்த்தினன்
வெம்மைசெய் வினைத்துகள் விளிய வென்றவன்
செம்மலர்த் திருந்தடி சீரி னேத்தினன். 63

மெய்மயிர் எறிந்து - மெய் சிலிர்த்துப் புளகமெழுந்து, ஒளி துளும்பு மேனியன்-ஒளிமிக்கு விளங்கும் மேனியனாகிய அரசன், கைமுகிழ் - கூப்பிய கைகளை, முடித்தடம்-தலையின்மீது,கதழ-விரைய,சேர்த்தினன் - சேர்த்தவனாய், வெம்மைசெய் வினைத்துகள் - வெவ்விய பிறவித் துன்பத்துக்கு ஏதுவாகிய வினைகளாகிய குற்றத்தை, விளிய வென்றவன் - மாய்ந்து கெடும்படி கோவித்தவனாகிய அருகனுடைய, செம்மலர்த் திருந்து அடி - செந்தாமரைபொத்த இலக்கணங்கள் நிறைந்த பாதங்களை, சீரின் ஏத்தினன் - புகழ்ந்து துதித்தான்.

வேறு [த்தி

181. அணியாது மொளிதிகழும் ஆரணங்கு திருமூர்
கணியாதுமுழுதுணர்ந்த கடவுளென்றறையுமே;
கணியாதுமுழுதுணர்ந்தகடவுளென்றறைந்தாலும்
அணிஞால முடையாயை அறிவாரோ வரியரே. 94

அணியாதும் - அணிகலனென்றையும் அணியாம லிருந்தும், ஒளிதிகழும் - காந்தியை வீசும், ஆர் அணங்கு - பேரழகு வாய்ந்த, திரு மூர்த்தி - திருமேனியை உடையவனே, கணியாது முழுதுஉணர்ந்த- இவ்வளவென்னும் வரையறையின்றி யாவற்றையும் முழுதுணர்ந்த, கடவுள் என்று - கடவுள் நீ என்று, அறையும் - (அருகாகமங்கள்) வற்புறுத்திக் கூறு நிற்கும். கணியாது... என்று—, அறைந்தாலும் - கூறு நிற்குமாயினும், அணிஞாலம் உடையாயை - மேலேழு கீழேழாக வரிசையாய் நிற்கும் பதினன்கு உலகங்களையும் ஆட்சியின்கீழ் உடையஉன்னை, அறிவாரோ- நன்கு அறிந்துணர்ந்தவர்களோ, அரியரே - காண்பதற்கு அரியராய் இருக்கின்றார்கள்.

ஆரணங்கு - அருமை அழகுமாம். கணியாது - உணரவேண்டு மென்று நினையாமலே, அதாவது இயற்கையாகவே, என்றுமாம். அணி - வரிசை, அடுக்கு.

182. பகைநாறு மயிற்படைகள்
பயிலாத திருமூர்த்தி
இகன்மாற வென்றுயர்ந்த
இறைவனென் றறையுமே;
இகன்மாற வென்றுயர்ந்த
இறைவனென் றறைந்தாலும்
அகன்ஞால முடையாயை
அறிவாரோ வரியரே. 65

பகைநாறும் - பகைத்தொழிலைச் செய்யும், அயில் படைகள் - வேல் முதலிய ஆயுதங்களை, பயிலாத - கையாளாத, திருமூர்த்தி—, இகல்மாற - பகைகெட, வென்று உயர்ந்த - வென்று மேம்பட்ட, இறைவன் என்று - இறைவன் நீயே என்று, அறையும் - ஆகமங்கள்சாற்றுநிற்கும். இகல்...என்று அறைந்தாலும்-, அகல் ஞாலம்உடையாயை - அகன்ற இந்த உலகங்களை உடையஉன்னை, அறிவாரோ அரியரே—.

183. திருமறுவு வலனணிந்து
திகழ்கின்ற திருமூர்த்தி
ஒருமறுவு மிலையென்ப
தொழியாம லுணர்த்துமே;
ஒருமறுவு மிலையென்ப
தொழியாம லுணர்த்துகினும்
அருமறையை விரித்தாயை
அறிவாரோ வரியரே. 66

திருமறு- ஸ்ரீவற்சம் என்னும் அழகிய மச்சத்தை, வலன் அணிந்து - வலது மார்பில் அணிந்து, திகழ்கின்ற - விளங்குகின்ற, திருமூர்த்தி—, ஒருமறுவும் இலை என்பது - நீ யாதொரு குற்றமும் அற்றவன் என்பதை,ஒழியாமல் - இடைவிடாமல், உணர்த்தும்- (ஆகமங்கள்) தெரிவியா நிற்கும். ஒரு....ஒழியாமல்—, உணர்த்துகினும் - தெரிவியாநிற்பினும், அருமறையை - அரியவேதங்களை, விரித்தாயை - விரித்து உரைத்தவனாகிய உன்னை, அறிவாரோ அரியரே—.

மறு - 'மறுவு' என உகரம்பெற்று வந்தது. மறு - (1) மச்சம்; (2) களங்கம். குற்றம்.

வேறு

184. இன்னண மிறைவனை யேத்தி யேந்தறன்
சென்னியுட் சேர்த்திய சேடப் பூவினன்
கன்னவி திருமணிக் கபாடந் தாழுறீஇ
முன்னிய திருநகர் முற்ற முன்னினன் 66

ஏந்தல் - அரசன், இன்னணம் - இவ்வாறு,இறைவனை - கடவுளை, ஏத்தி - துதித்து, தன் சென்னியுள்-தனது தலையின்மீது, சேர்த்திய-சூடிக்கொண்ட, சேடம் பூவினன் - நிருமாலியப் பூவினனுய், கல்நவில் திருமணிக் கபாடம் - இரத்தினங்கள் பதிக்கப் பெற்றதும் அழகிய மணிகள் கட்டியதுமான கதவை, தாழ் உறீஇ - தாழிட்டுச் சாத்தச் செய்து, முன்னிய திருநகர் முற்றம் - கோவிலின் முன்பக்கத்திலுள்ள வெளிவாசலை, முன்னினன் - உற்றான்.

சேடம் - சேஷம், மிச்சம்; சேடப்பூ - கடவுளர் பெரியோர் பாதங்களில் அருச்சித்துக் கழித்தபூவைப் பிரசாதமாக வாங்கித் தலையிற் சூடிக்கொள்ளுதல் மரபு. திருநகர் - கோயில்.

185. ஆரணங் கவிரொளி யெரிய ஆயிடைச்
சாரணர் விசும்பினின் றிழிந்து தாதைதன்
ஏரணி வளநகர் வலங்கொண் டின்னணம்
சீரணி மணிக்குரல் சிலம்ப வாழ்த்தினர். 68

ஆயிடை-(அப்பொழுது)அவ்விடத்தில், சாரணர் - ஆகாயத்திற் சஞ்சரிப்பவராகிய சமணமுனிவர், ஆர் அணங்கு அவிர் ஒளி எரிய - நிறைந்த தெய்வத் தன்மை பொருந்திய பிரகாசிக்கின்ற தேககாந்தி நாற்புறமும் பிரகாசிக்க, விசும்பின் நின்று இழிந்து - ஆகாயத்திலிருந்து கீழே இறங்கி, தாதைதன் - எல்லாவுயிர்க்கும் தந்தையாகிய அருகனது, ஏர் அணி வளம் நகர் - அழகையணிந்த செல்வமிக்க கோயிலை, வலம்கொண்டு - வலமாகச் சுற்றி, சீர் அணி - சிறப்புற்ற, மணிக்குரல் - மணியின் ஒலியை யொத்த கம்பீரமான குரலோடு, இன்னணம் வாழ்த்தினர் - பின் வருமாறு துதித்தார்கள். அணங்கு-தெய்வத்தன்மை. சீர் - நல்லநாதம். சிலம்ப - ஒலிக்க.

வேறு

186. விரைமணந்த தாமரைமேல்
விண்வணங்கச் சென்றாய்
உரைமணந்தி யாம்பரவ
யுண்மகிழ்வா யல்லை
உண்மகிழ் வாயல்லை
பெனினுமுல கெல்லாம்
கண்மகிழ நின்றாய்கட்
காதலொழி யோமே. 69

விரைமணந்த-வாசனையோடு கூடிய, தாமரைமேல் - தாமரை மலரின்மேல், விண் வணங்க - தேவர்கள் வணங்க, சென்றாய் - எங்கும் செல்பவனே, உரை மணந்து - சொல்மணம்பெற, யாம் பரவ - யாம் உன்னைத் துதிக்க அதைக்கேட்டு, உள்மகிழ்வாய் அல்லை- நீ உள்ளம் களிப்பவன் அல்லை. உண்மகிழ.......... யெனினும்—, உலகு எல்லாம்-உலகத்திலுள்ள உயிர்களெல்லாம், கண்மகிழ - உன்னைக்கண்டுஉளங்களிப்ப

நின்றாய் கண் - மூர்த்தங்கொண்டு எழுந்துநின்ற உன்னிடத்து, காதல் - துதிக்கும் ஆசை, ஒழியோம்- ஒரு நாளும் நீங்கோம்.

187. முருகணங்கு தாமரையின்
மொய்மலர்மேற் சென்றாய்
அருகணங்கி யேத்தியது
மகிழ்வா யல்லை;
அதுமகிழ் வாயல்லை
யெனினும் பெயராத
கதிமகிழ நின்றாய்கட்
காதலொழி யோமே. 70.

முருகு - தேனையுடைய, அணங்கு - தெய்வத் தன்மை வாய்ந்த, தாமரையின் மொய் மலர் மேல் - தாமரையின் இதழ்கள் நெருங்கிய மலரின்மேல், சென்றாய் - ஊர்ந்து செல்பவனே, அருகு - உன்னருகே சார்ந்து, அணங்கி - ஆசையுடன், ஏத்தியது - நாம் துதிக்கும் துதிமொழிகளைக்கேட்டு, மகிழ்வாய் அல்லை - நீ மகிழ்கின்றவன் அல்லை. அது மகிழ்வாய் அல்லை எனினும்,—பெயராத - மாறாத (நிலைத்த), கதி மகிழ - முத்திநிலையைப் பெற்று உயிர்கள் மகிழுமாறு, நின்றாய்கண் - கோயில்கொண்டெழுந்தருளிய உன்னிடத்து, காதல் ஒழியோம்—.

அணங்கி - அணங்கு, ஆசை. பெயராதகதி - மீளாநெறி, முத்தி.

188. மணமயங்கு தாமரைமேல்
வான்வணங்கச் சென்றாய்
குணமயங்கி யாம்பரவக்
கொண்டுவப் பாயல்லை;
கொண்டுவப் பாயல்லை
யெனினுங் குளிர்ந்துலகம்
கண்டுவப்ப நின்றாய்கட்
காதலொழி யோமே. 71

மணம் மயங்கு-வாசனையோடுகூடிய, தாமரைமேல்-, வான்வணங்க - தேவர்கள் வணங்கும்படி, சென்றாய் - செல்பவனே, குணம்-உனது அனந்தகுணங்களை, மயங்கி-ஆனந்தபரவசராய் (அறிவிழந்து), யாம்பரவ-யாம் உன்னைத் துதிக்க, கொண்டு உவப்பாய் அல்லை - அத்துதியை ஏற்றுக்கொண்டு மகிழ்பவன் அல்லை நீ. கொண்டு.........எனினும்—, உலகம் - உயிர்கள், குளிர்ந்துகண்டு - உன்னை உள்ளங்குளிரத் தரிசித்து, உவப்ப-மகிழுமாறு, நின்றாய்கண் - நின்ற உன்னிடத்து, காதல் ஒழியோம்—.

மயங்குதல்-கலத்தல், கூடுதல். யாம்மயங்கிக்குணம் பரவ.

வேறு.

189. தீதறு முனிவர்தஞ் செல்வன் சேவடிக்
காதலி னெழுவிய காம ரின்னிசை
ஏதமின் றெவ்வள விசைத்த தவ்வளவு
ஓதிய வுயிர்க்கெலா முறுகண் டீர்ந்தவே. 72.

தீது அறு-குற்றங்களில்லாத,முனிவர்-அச்சாரணர், தம்செல்வன் செம்மை அடி காதலின் - தமது செல்வமெனக்கருதிய அருகதேவனது செம்மையான பாதங்களினிடத்துள்ள அன்பால், எழுவிய - இசைத்த, காமர் இன் இசை - விரும்பத்தக்க இனிய துதிப் பாட்டு, ஏதம் இன்று-குற்றமின்றி, எவ்வளவுஇசைத்தது அவ்வளவு - எவ்வளவுதூரம் சென்று இசைத்ததோ அவ்வளவும், ஓதிய உயிர்க்கு எல்லாம் - பலவகைத்தெனச் சொல்லப்பட்ட உயிர்களுக்கெல்லாம், உறுகண் தீர்ந்தன - துன்ப துயரங்கள் ஒழிந்தன.

எழுவிய - எழுப்பிய. கேட்ட உயிர்களின் உறுகண் யாவற்றையும் ஒழித்தலால், 'ஏதமின்றி இசைத்தது' என்றார்.

190. இறைவனை யின்னண மேத்தித் தந்தொழில்
குறைவிலா முடிந்தபின் குணக்குன் றாயினர்
மறமலி மன்னனை நோக்கி மற்றவற்
கறமழை பொழிவதோ ரார்வ மெய்தினர். 73.

குணம் குன்று ஆயினர் - குணங்களால் மலைபோல் உயர்ந்த அம்முனிவர், இறைவனை—, இன்னணம் ஏத்தி - இவ்வாறு துதித்து, தம் தொழில் குறைவிலா முடிந்தபின்-கடவுளை வழிபடுதலாகிய தமதுதொழில் யாதொரு குறைவுமின்றி முடிந்தபின், மறம் மலி மன்னனை நோக்கி-வீரம் நிறைந்த மன்னனைப்பார்த்து, அவன்கு - அவனுக்கு, அறம்மழை - தருமோபதேசமாகிய மழையை, பொழிவது ஒரு ஆசை எய்தினர்-பொழியவேண்டுமென்னும் விருப்பத்தைஉற்றார்.

191. தென்றலுஞ் செழுமதுத் திவலை மாரியும்
என்றுநின் றறுததோ ரிளந்தண் பிண்டியும்
நின்றொளி திகழ்வதோர் நிலாக்கல் வட்டமும்
சென்றவ ரமர்ந்துழித் திகழ்ந்து தோன்றுமே.

சென்று அவர் அமர்ந்த உழி - அவர்கள் சென்று தங்கிய இடத்தில், தென்றலும் - தென்றற்காற்றும், செழும் மது திவலை மாரியும் - நல்ல தேன் துளியின் மழையும், என்றும் நின்று அறுதது -என்றும் நீங்காமல் நிலைபெற்றுள்ளதாகிய, ஓர் இளம் தண் பிண்டியும் - ஒரு இளமையான குளிர்ந்த அசோகமரமும், ஒளி நின்று திகழ்வது ஓர் நிலாக்கல் வட்டமும் - ஒளி நீங்காமல் வீசும் சந்திரகாந்தக் கல்லாலாகிய ஒரு சிலாதலமும், திகழ்ந்து தோன்றும் - விளங்கத் தோன்றும்.

பிண்டி - அசோகமரம். அமர்ந்துழி-அமர்ந்த உழி.

192. வென்றவன் றிருநகர் விளங்கு வேதிகை
முன்றில்சேர்ந் திருந்தனர் முனிவ ராதலும்
மின்றவழ் விளங்குவேல் வென்றி வேந்தனும்
சென்றவர் திருந்தடி முடியிற் றீட்டினான். 75

முனிவர்—, வென்றவன் - காமம் முதலியவற்றை வென்றவனாகிய அருகனது, வேதிகை விளங்கு திருநகர் முன்றில் - சிலாதலம் விளங்கிய அந்தக் கோயிலின் முன்பக்கத்தை, சேர்ந்து இருந்தனர் ஆதலும் - சென்றடைந்து அமர்ந்திருக்கவும், மின் தவழ் - மின்னலைப்போன்ற ஒளிவீசும், வேல் - வேலாற்கிடைத்த, வென்றி வேந்தனும் - ஜயம் பொருந்திய மன்னனும், சென்று - அவ்விடஞ்சேர்ந்து, அவர் திருந்து அடி முடியில் தீட்டினான்-அவருடைய அழகிய திருவடிகளைத் தனது சிரசின்மீது பதியும்படி சூட்டிக்கொண்டான்.

வென்றவன் - மன்மதனை, அல்லது பஞ்சேந்திரியங்களையும், அல்லது காதிகர்மங்களை வென்றவன். தீட்டுதல் - எழுதுதல், பொறித்தல், பதியச் சூடுதல்; தீண்டுதல் என்றுமாம்.

பிஸாரோ

(Copy-right with Messrs. C. Coomaraswamy Naidu & Sons.)

ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய வோர் ஆங்கில நாடகத்தின் மொழிபெயர்ப்பு

[351-வது பக்கத் தொடர்ச்சி]

ஐந்தாவது அங்கம்

முதற் களம்

இடம்:—காடு. தூரத்தில் ஒரு குடிசை தென்படுகின்றது.

[குழந்தையை இலைகள் பரப்பிப் படுக்கவிட்டுக் கோரா பக்கத்தில் உட்கார்ந்திருக்கின்றாள். மின்னலிடியுடன் மழை பெய்கின்றது.

கோரா:—ஓ பூதங்காள்! வாஞ்சையை வெல்லும் வலிமை உமக்கில்லை. எனதாவி எதற்கும் சலிக்காது. தாங்கமாட்டாமல் தவிப்பது நடுங்கும் எனது உடல் தான். என் கண்ணே! உன்னைச் சுமக்கத்தான் முடியாமல் என் கைகள் அயர்ந்துபோனாலும், இந்தப்படுக்கைகூடவோ உனக்குப் போடாமல் யான் போய்விடுவேன்! உன் தந்தை நம்மை நீத்து மீளாவழியே நீங்கிக் கழிந்தார் என்பது நிச்சயமாயினல் நானும் உன்னருகில் விழுந்துவிடுவேனே. எழுந்திருக்காதே—அப்பா, படுத்துக்கொள். ஒரே படுக்கையாய்ப் படுத்துக்கொள்! (மின்னலு மிடியும்) இரக்கமற்ற புயலே! கோராவின் துன்பத்தைக்கண்டு மனமிரங்கி உன் ஆரவாரத்தை யடக்கநான் வேண்டவில்லை. நீயுருட்டும்பேரிடியும்என் பெருமானைத் துயிலுணர்த்தப் போதாமற் போயிற்றே! உயிருள்ளோர் குரலொன்று கேட்க நான் தவிப்பது தெய்வத்திற்குத்தான் தெரியும். என் உணர்வெல்லாம் அடியுடன் அழிகின்றவரையில் எதனையும் நான் எளிதிற் பொறுப்பேன். (பாடுகின்றாள்.)

அகவல்

கொடியதாம் புயலே! கொடியதாம் புயலே!
துடிகொள் என்பால் அருள்நீ கொள்ளேல்;
என்என் இதுவுநின் அருளே யாகும்,
ஆமோர் அச்சமும் அடையும் அயர்வும்
இல்லா துன்னை எதிர்ப்பேன் எதிர்ப்பேன்,
கொல்லும் நினது கோபத் தீக்கும்
என்றன் மனத்தை இரையாத் தருவேன்,
நன்றுநீ எனையென் நாயகன் அலான்ஸோ
பக்கலிற் சேர்ப்பின் பண்பே என்பேன்,
மிக்குயர் நினது மின்னலின் ஒளியால்
அவருடல் கண்டு அருகிற் சார்ந்து
தவமுறக் கட்டிச் சஞ்சல நீங்குற
அணைத்தே முத்திட் டங்கம்
பிணைப்புற இறந்து பேரின் படைவேன்.

தாலாட்டு

முத்தே பவழமே முழுமணியே என்கண்ணே
இத்தரையில் நீயும் கிடந்திப்போ கண்விழியாய்.
நீரார் உலகினில்நீ நீடுழி வாழ்ந்திடவே
சீரார் பசுங்கிளியே செல்வமே கண்வளராய்.
உன்றனருந் தந்தையோ ஒருபோதும் கண்விழியார்
என்றன் அருமருந்தே இப்போதே கண்வளராய்.
அன்பான கண்மணிநீ அயர்ந்துதுயில் போவதற்கு
இன்பாக என்கரமாம் எழில்தொட்டில் கண்வளராய்.
தேடரிய மாமணியே தெள்ளமுதே முக்கனியே
நாடரியக் கண்காண நாயகமே கண்வளராய்.

இன்னும், சாந்தமாக மாட்டீர்களோ! உணர்ச்சியற்ற பூதங்காள்! இத்தனைக்கும் மைந்தா நீ மந்த நகையுடன் தூங்குகின்றனையே! என் செல்வமே! ஓ, காலனே! இக் குழவியின் தாய்க்கும் எப்பொழுது நீ இவ்வித அமைதி அளிக்கப்போகின்றனையோ? ஐயோ, பாவம். நன்றாய்ப் போர்த்துகின்றேன். பாழும் புயலுன்னை ?......

[தனது மேலங்கியை அவள் குழந்தைமேல் சுற்றும்போது அலான்ஸோவின் குரல் தூரத்தில் கேட்கின்றது]

அலான்ஸோ—கோரா!

கோரா—ஹ! (எழுந்திருக்கின்றாள்)

அலான்ஸோ—கோரா!

கோரா—ஹோ! என் இதயமே! தெய்வமே என்னைச் சோதிக்காதே! அது அலான்ஸோவின் குரலன்றோ?

அலான்ஸோ—[இன்னும் சமீபத்தில்] கோரா!

கோரா—அது! அது—அலான்ஸோதான்!

அலான்ஸோ—(வெகு சமீபத்தில்) கோரா, என் செல்வியே!

கோரா—அலான்ஸோ! இதோ! இங்கே! அலான்ஸோ. (வெளியே ஓடுகின்றாள்)

[இரண்டு ஸ்பானிய சேவகர்கள் வருகின்றனர்]

முதல் சேவகன்— நமதிடங்கடந்து வெகுதூரம் நாம் வந்து விட்டோமென்று சொல்வது பிழையில்லை. குழுஉக்குறி எல்லை எல்லாம் மாறிவிட்டது.

இரண்டாம் சேவகன்—ஏதோ! தப்பியோடுகையில் நம்பகைவர் அந்தரங்கவழியைக் கண்டுபிடித்துவிட்டோம். நமது நற்காலம்தான் இது. பிஸாரோவினிடம் தக்க வெகுமதி பெறலாம்.

முதல் சேவகன்—இப்படிவா: சூரியன் மேக மூடியிருந்தாலும் இடது பக்கத்திலிருக்கிறது.

[குழந்தையைப் பார்க்கின்றான்]

இதென்ன விது! ஒரு குழந்தை! என்ன விந்தை!

இரண்டாம் சேவகன்—வெகு அழகான வொரு சிறு சிசு விது! அதன் அஞ்ஞானித் தாயின் பொய் மதத்தினின்றிதை மீட்டிச் செல்வோமாயின் பெரிய தருமமாகும்.

முதல் சேவகன்—ஆம், என் வீட்டிலும் ஒரு குழந்தை யிருக்கின்றது. அதுவு மிதுவும் ஒன்றாய் விளையாடும்—வா போவோம்.

[குழந்தையை எடுத்துச் செல்கின்றார்கள்.]

கோரா—(உள்ளே) இந்த வழி வா, அன்ப.

[கோராவும் அலான்ஸோவும் வருகின்றார்.]

நான் சொன்னது பிழையில்லை - அங்கே - அதோ- அந்த மரத்தடியில்—எந்தத் தாய்தான் தன் குழந்தையை விட்டுவந்த இடத்தை மறப்பாள்! நீயே போய் அவன் தூங்குகையில் பார்க்கின்றாயா? மலர்ந்த கண்களுடன் அவனே உன்னை வரவழைக்க, இதோ எழுப்பி வரட்டுமா? ஆம், அதுதான் நேர்! நீ இங்கேயே இரு; அவனை மலரின் மெல்லிதழ் குவிந்ததன்ன நித்திரையினின் றெழுப்பி அருணோதய மெனச் சிவந்த முகத்துடன் நானே கொண்டு வருகின்றேன்.

[அங்குச் சென்று போர்வை மாத்திரமிருக்கக் குழந்தையைக் காணாது கதறுகின்றாள்.]

அலான்ஸோ:—(அவளிடம் ஓடி) கோரா! என தினியாய்! என்ன நேரிட்டுவிட்டது?

கோரா:—ஐயோ! போய் விட்டதே!

அலான்ஸோ:—ஐயோ! தெய்வமே!

கோரா:—போயே போய்விட்டாயே! என்கண்ணே! என்பவளமே!

அலான்ஸோ :-எங்கே! எங்கே வளர்த்தியிருந்தாய்?

கோரா:—இங்கே! இங்கே!

[குழந்தையை விட்டிருந்த விடத்தில் தன் தலையை மோதிக்கொள்கின்றாள்.]

அலான்ஸோ— பொறு பொறு! கோரா, விழித்துக்கொண்டு இங்குத்தான் எங்கேயாவது தவழ்ந்து போயிருப்பான்; அகப்படுவான். நீ அவனை விட்டு வந்த இடம் இதுவே என்பது நிச்சயந்தானா?

கோரா—ஐயோ! நான்தானே இவ் விலைகளைப் பரப்பினேன். ஐயையோ! போர்வைகூட இருக்கின்றதே இதோ!

அலான்ஸோ—அந்தக் குடிசையைப் பார்க்கவில்லையே, இன்னும்.

கோரா—ஹா! ஆமாம். என் குழந்தையைத் திருடிய கொடியோன் அங்கேதான் இருக்கிறான்.

[போய்க் கதவை இடிக்கின்றாள்.]

என் குழந்தையைக் கொடுத்துவிடு. கண்மணீ!

[லஸ்கஸஸ் குடிசையினின்று வெளியே வருகிறார்]

லஸ்கஸஸ்—விழுந்துகிடக்கும் என்னை வெளியே அழைப்பதார்?

கோரா—கொடுத்துவிடு குழந்தையை! (குடிசைக் குள்ளோடி) கண்மணீ! பர்ணுண்டோ, கண்மணீ!

அலான்ஸோ— எல்லாம் வல்ல இறைவனே, இதென்ன, என்கண்கள் என்னை வஞ்சிக்கின்றனவா? லஸ்கஸஸ் பிரபோ!

லஸ்கஸஸ்—அலான்ஸோ, என்னுயிர் நண்ப!

அலான்ஸோ—எனது குரு வர!

(தழுவிக்கொள்கின்றார்.)

[கோரா மறுபடியும் வருகின்றாள்]

கோரா—என்ன! குழந்தையைக் கொடுக்குமுன் இவனைத் தழுவுவாயோ?

அலான்ஸோ:—ஐயோ! நாமென்ன துன்பமுற்ற வேளையிற் சந்திக்கின்றோம்!

கோரா—ஆயினும் இவர் கண்களினின்று தருமமும் தண்மையுமே ஒழுகுகின்றன. உங்களுக்கோ வயதாயிற்று. துக்கமுற்ற ஒரு தாயின்மீது சிறிது இரக்கம் கொள்ளுங்கள்—ஆயுளுள்ளவரையில் உங்களுக்கு அடிமையா யிருக்கின்றேன். வேண்டாம். ஐயோ, என்னிடத்திலில்லை யென்று சொல்ல வேண்டாம். மறுக்காதீர். (காட்டிற்குள் ஓடுகின்றாள்.)

லஸ்கஸஸ்—இவைகளின் பொருள் ஒன்றும் எனக்கு விளங்கவில்லையே.

அலான்ஸோ—அவளென் மனைவி. சிறையிலிருந்து இப்பொழுதுதான் தப்பி வரும் நான் அவள் கானகம் சென்றுவிட்டாளென்ப தறிந்து அவளை இங்கே தேடி வந்தேன். என் குரலைக் கேட்டவள், குழந்தையை விட்டுவிட்டு என்னையே நாடி ஓடிவந்தாள். குழந்தை அம்மரத்தடியில் தூங்கிக்கொண்டிருந்தது.

[கோரா மறுபடியும் வருகின்றாள்.]

லஸ்கஸஸ்—என்ன! தனியாகவா விட்டுச் சென்றனை?

கோரா—ஹோ! ஐயோ! நீவிர் வைவது எனக்குத் தக்கதே. கடையிலுங் கடையாயவோர் தாயே நான்! குழந்தையைத்தனியே விட்டோடினேன். பாவம் பேதை பென் பாலகனைக் கைவிட்டேனே! இருக்கட்டும்; பூமண்டலம் முழுவதும் ஓடியேனுந்தேடிக் கண்டு பிடிக்காமற் போவேனா! (ஓடுகின்றாள்.)

அலான்ஸோ—மன்னிக்க வேண்டும். லஸ்கஸஸ், நானவளைப் பின்பற்றிச் செல்கின்றேன். அன்றியும், ரோலாவைச்சிறைநீக்க யான்மிகவிரைந்தேகவேண்டும்.

லஸ்கஸஸ்:—நானும் வருகின்றேன், அலான்ஸோ. நீயவளைச் நேரான வழியில் அழைத்துச் செல். என் தளர்ந்த நடைக்காகத் தாமதிக்காதே. நான் பின்னே வந்து சேர்கின்றேன். (போகின்றார்.)

—

இரண்டாங் களம்

இடம்:—ஸ்பானியர் கூடாரம்.

[தூரத்தில் ஓர் நீரோடையும் அதன்மேல் ஒரு மரக்கட்டைப் பாலமும் தெரிகின்றன. எக்காளம் முழங்குகின்றது. அல்மாக்ரோ, போர்ச்சேவகர்கள் பின் தொடர, ரோலாவைச் சங்கிலிகட்டி இழுத்துவருகின்றான்.

அல்மாக்ரோ:—இழுத்து வாருங்கள் இங்கே! இந்தக் கட்டுக்கதை யெல்லாம் இங்குச் செல்லாதையா; அது பொய்!

ரோலா:—பொய்யா! ரோலா பொய் சொல்வதா! ஆகா! இப்பொழுது நீ யொரு பாலைவனத்தில் பொருபடையுடனிருக்க, என் வாளொன்றே துணையாய் நானுன்னைத் தனித்தெதிர்க்கக் கூடுமாயின்....

[உள்ளே எக்காளம் ஊதுகின்றது.]

அல்மாக்ரோ:—பெருவியருள் பேர்பெற்ற ரோலா ஒரு கள்வனைப்போல் ஒற்றுக்கேட்கவந்து ஒளிந்தொளிந்து திரிவது விந்தையே!

ரோலா:—ஒளிந்திருந்தேனா!

அல்மாக்ரோ—எங்கள் தலைவருக்கே பதிற்சொல், இதோ வருகின்றார்.

[பிஸாரோ வருகின்றான்]

பிஸாரோ—இது வென்ன இது! ரோலா!

ரோலா—மிக்க ஆச்சரியந்தான் உனக்கு; ஓ! சந்தேகமென்ன!

பிஸாரோ—கட்டுண்டு கூடவா!

ரோலா—ஆம்; மிக இறுக—என்னருகில் நீ நிர்ப்பயமாய் வரலாம்.

அல்மாக்ரோ—வெளிப்புறத்தில் காவற்சேவகர்கள் இவனைப் பிடித்துக் கட்டிவிட்டனர்.

பிஸாரோ—அவிழ்த்துவிடுங்கள் இவ்வீரனை இக்கணமே! ரோலா, உனக்கு இந்நிந்தனை நேரிட்டதற்காக நான் உண்மையில் மிக வருந்துகின்றேன்.

ரோலா—ஆயின் நீ செய்யவேண்டியதைச் செய்கின்றாய்.

பிஸாரோ—மேலும், ரோலாவைப்போல் பேர் எடுத்த ஒரு வீரன் நிராயுதபாணியா யிருக்கச் சகியேன். உனது சத்துருவினதாயினும், இதைத் தயவுசெய்து ஏற்றுக்கொள்.

[ஒரு வாளைக் கொடுக்கின்றான்]

ஆண்மைக்குரிய பெருமையை ஸ்பானியர் அறிவார்.

ரோலா—தமக்கிழைத்த தீமைகளை மன்னிக்கவும் பெருவியர்க்குத் தெரியும்.

பிஸாரோ—ரோலாவும் பிஸாரோவும் சத்துருக்களா யில்லாம லிருக்கமுடியாதா?

ரோலா—ஆம்! உன்னையு மென்னையும் இக்கடல் பிரிக்குமாயின்!...நான் போகலாமா?

பிஸாரோ—தடையின்றி.

ரோலா—மறுபடி வழிமறிக்க மாட்டார்களே?

பிஸாரோ — மாட்டார்கள் — ரோலாவை இடையூறின்றி அனுப்பச் சொல்லுங்கள்.

[தவில்லா, இரண்டு சிப்பாய்களுடன், அலான்ஸோவின் குழந்தையை எடுத்து வருகின்றான்.]

தவில்லா—நேற்றுச் சிறையுண்ட நம்மிரு சேவகர்களும் இதோ தப்பி வந்துவிட்டார். நாம் கண்டறிய வீணே இவ்வளவு வருந்திய பெருவியர் அந்தரங்க மார்க்கத்தையும்—

பிஸாரோ—சே! வாயை மூடு! முன்புத்தி வேண்டா முனக்கு? கண் தெரியவில்லை, இதோ!—

(ரோலாவைச் சுட்டிக் காட்டுகின்றான்).

தவில்லா—வழியில், இப்பெருவிய குழந்தையைக் கண்டெடுத்தார்கள். அதைப் பார்த்தால்—

பிஸாரோ—இந்தச் சனியன் ஏன் எனக்கு—காலை வாரிக் கடலில் போட்டுவிடச்சொல்.

ரோலா—அடதெய்வமே! இது அலான்ஸோவின் குழந்தை! என்னிடம் கொடுத்துவிடு.

பிஸாரோ:—ஆகா! அலான்ஸோவின் குழந்தையா!

[குழந்தையைத் தன் கையில் வாங்கிக்கொள்கின்றான்]

வருக வருக, பாலகப்பிணையே, வருக! இப்பொழுது அலான்ஸோ மறுபடி என்கை யகப்பட்டான்!

ரோலா:—இச் சிசுவைத் தாயினின்று பிரித்து நீ வைப்பாயோ?

பிஸாரோ:—மாட்டேனோ? என்ன! அலான்ஸோ மார்தட்டிப் போர்புரியும்போது, தன் குழந்தை என் வசத்தி லுளதென்பதை யுணர அவன் கைவாள்கீழ் நழுவச் சோர்ந்துநின் றென்வாளிற்கு இரையாகாமல் தப்புவானோ?

ரோலா:—நீ சொல்வது விளங்கவில்லை.

பிஸாரோ:—பண்டைநாள் பட்டபகை வட்டியு முதலுமாக மிகவும் அதிகரித்திருக்கின்றது. அதை அலான்ஸோவினுடன் தீர்த்துக்கொள்ள வேண்டும். இச்சிசுவே அக் காரியத்திற்குப் பிணையாயிருக்கும்.

(குழந்தையை ஒரு சேவகனிடம் கொடுக்கின்றான்.)

ரோலா:—அடே, அடே! நீயும் ஒரு மானுடப் பிறவியா? அந்நிரபராதிக்குத் தீங்கிழைக்கவும் மனம் வருகின்றதோ உனக்கு! தெய்வமே, உன் மூஞ்சியைக் கண்டு சிரிக்கவும் சிரிக்கின்றதே அப்பாழுங் குழவி.

பிஸாரோ:—அதற்குக் கோராவின் சாடை யிருக்கின்றதோ?

ரோலா:—பிஸாரோ, என் இதயத்திற்கு நீ இந்தச் சொல்லால் தீ வைத்துவிட்டாய். நீசிந்தும் அதன் இரத்தம் மலட்டு மணற்பாங்கில் தோய்ந்துகிடக்குமென் றெண்ணாதே. இல்லை, உனதுகொடுமையின் தாபத்தால் அது ஆவியாகி வானமேறிக் கருணைக்கடவுளைக்கொண்டு தன் உயிர்மாய்த்த பாவியின் படுதலையில் இடி விழத் தூண்டாது விடாது. சண்டாளா!

பிஸாரோ:—என் கர்மம் என் தலைமேலேயே இருக்கட்டும்.

ரோலா:— (பிஸாரோவின் காலில் விழுந்து) உன் காலின்கீழ்க் கிடக்கும் என்னைப் பார்—நான், ரோலா—நான் உன்னுயிரைக் காப்பாற்றினவன். நான்—இதுவரையில் படைப்புளடங்கிய மானுடனொருவனுக்கு முன்னும் வணங்கி நின்றிராதவன்! இரங்கிக் கேட்கிறேன்—காலில் விழுந்து வேண்டுகின்றேன்—இச் சிசுக்கொலை செய்யாதே. அவ்விள உயிர்க்கு மாறாக நானே யுனக் கடிமையாய்விடுகின்றேன்.

பிஸாரோ—ரோலா! நீ இடையூறின்றி ஏகலாம்—இச்சிறுவன் என்னிடமே இருக்கட்டும்.

ரோலா—ஆயின், இவ் வாள் எனக்குக் கடவுள் கொடுத்த வரமேயாகும்—நீ கொடுக்கவில்லை!

[குழந்தையைப் பிடுங்கிக் கொள்கின்றான்.]

என்னைப் பின்பற்றி ஒரு அடி எடுத்துவைக்க முயல்பவன் இருக்கு மிடத்திலே உயிர்துறந்தவனாவான்!

(குழந்தையுடன் விரைந்து போகின்றான்.)

பிஸாரோ—ஓடுங்கள், அவன்பின் ஓடுங்கள். எனினும் அவனுயிர்க்குமாத்திரம் எத் தீங்கும் செய்ய வேண்டாம்.

[தவில்லாவும் அல்மாக்ரோவும், சேவகர்களுடன் போகின்றார்.]

அடடா! என்ன ஆண்மையுடன் தன்னைக் காத்துக்கொள்கின்றான். ஹா, ஒவ்வொருவனும் மடிந்து விழுகின்றானே—உம்—இப்பொழுது—

[அல்மாக்ரோ வருகிறான்.]

அல்மாக்ரோ—இம் மடையனின் உயிரைத் தொடவேண்டா மென்ற உன் கட்டளைக்கு நம் வீரர்களுள் மூவர் இரையாய் விட்டனர்;—இன்னும் சிறிது தூரம் தப்பிச் சென்றுவிடுவானே யாயின்—

பிஸாரோ—இனி தயையொன்றும் வைக்க வேண்டாம்.

[அல்மாக்ரோ போகின்றான்.]

பீரங்கிக்கும் எட்டாமற் போவானோ—என்ன அதற்கும் தப்பிவிடுவான்போ லிருக்கின்றதே—ஹ! ஹ!! ஒரு குதிரைவீரன் துரத்துகின்றான். ஐயோ, ரோலா அவனைப் பார்த்துவிட்டானே—இதோ நீரோடையண்டை வந்துவிட்டானே, இன்னும் எங்குத் தான் ஓடுகின்றான் பார்ப்போம்.

[ரோலா பாலத்தைக் கடந்து அதைக் காலால் உதைத்து உடைத்துவிடுகின்றான்.]

[சிப்பாய்கள் ரோலாவைப் பார்த்துச் சுடுகின்றார்.—ஒரு குண்டு அவன் மேற் பாய்கின்றது.]

இதோ, சீக்கிரம், சீக்கிரம், குழந்தையைப் பிடுங்கிக் கொள்ளுங்கள்.

[ரோலா குழந்தையுடன் ஓடுகின்ருன். அல்மாக்ரோவும் தவில்லாவும் வருகின்ருர்.]

அல்மாக்ரோ—தப்பியோடி விட்டனனே!—அதுவும் குழந்தைக்குச் சிறிதும் புண்படாமல்—

தவில்லா—இல்லை—அவன் எமனையும் அவனுடனேயே சுமந்து செல்கிருன். முதுகில் குண்டுபாய நானே பார்த்தேன்.

பிஸாரோ—என்னவாறு லென்ன, குழந்தை தப்பி விட்டது — அலான்ஸோவின் குழந்தை! ஹோ! இங்கேயுமா என் எண்ணம் குலைந்துபோக வேண்டும்!

அல்மாக்ரோ—வாய்ப் புலம்பலில் யாது பயன்—காரியத்தைப் பார்ப்போம்! பெருவியாது அந்தரங்க வழியின் இரகசியமும் நமக்குத்தெரிந்துவிட்டதென்பதை மறக்கலாகாது. அவ்வழி யவர்கள் மனைவி மக்களை யொளித்துவைத்திருக்கும் கோட்டைக்குட் கொண்டு விடுகின்றது.

பிஸாரோ—நல்லது அல்மாக்ரோ; பொறுக்கியெடுத்த படை வீரர்களுடன் பறந்து செல்வோம்—தொகைக்காகக் காக்கவேண்டாம். இரு இரு! அல்மாக்ரோ, எல்விரா இன்றையதினம் இறக்க வேண்டு மென்பதை வல்வெர்தேயுக்குத் தெரியப் படுத்தி யிருக்கின்ருயோ!

அல்மாக்ரோ—தெரியப்படுத்தி யிருக்கின்றேன்—அவள் கடைசி விண்ணப்பம் ஒன்று—

பிஸாரோ—நானென்றிற்கும் செவிகொடேன்.

அல்மாக்ரோ—அவள் கேட்கும் வரம் மிகச் சிறியது. தாங்களவளை முதல்முதல் கண்ணுற்றபோது அவள் அணிந்திருந்த கன்னிமாட உடையைத் தனக்கிப்பொழுது தரவேண்டுமென்பதுதான். தனது அவமானத்தையெல்லாம் நினைப்பூட்டும் இப்பட்டாடைகளணிந்து உயிர்துறக்க அவளுக்கு மனமில்லை.

பிஸாரோ—நல்லது, உன்விருப்பத்தின்படி செய்—ஆனல் இதைமாத்திரம் வல்வெர்தேயுடன் சொல்—அவனுயிர்மேல் அவனுக் காசை யுண்டானல்—எல்விரா இறந்துவிட்டாள் என்பதை நான் திரும்பி வந்ததும் கேட்கவேண்டும்.

(எல்லாரும் போகின்ருர்)

—

கம்பராமாயணம்

அயோத்தியா காண்டம்— 4. நகர்நீங்கு படலம்.

[348-வது பக்கத் தொடர்ச்சி]

உண்மைமி லுழல்வ தேல்லா
மேம்மைமை மறப்ப தாமே.

மானுட இயற்கையோடியைந்து வாய்மை வழாது வரைபவர் என்னுமோர் தொல்புகழ் வான்மீக முனிவரை எய்தியுளது. அவ்வியம் அவா அனையவை வந்தசைக்கச் சாய்கின்ற செவ்வியில மனிதர் தம் பிறப்பியற்கைக் குன்மையாய் ஒழுகுகின்றனர் என்னுங் கருத்தன்ருே இப்புகழின் திறம். உண்மைக்கும் மெய்ம்மைக்கும் உள்ள வேறுபாட்டினை இப்பத்திரிகையின் ஆசிரியர் முன்வந்த சில தலையங்கங்களில் காட்டினர். உளவாகி இருப்பதை உண்மையென்றும், இருக்கவேண்டியதை மெய்ம்மை யென்றும் வரையறுத்து அவையிரண்டும் வேறவேறு என உரைத்ததில் பிழையிலதெனினும், "மெய்ம்மைக்கு மாருயது உண்மை" எனச் சாற்றுமாற்ருல் இத் தத்துவத்தின் நுண்மை சிறப்பினுஞ் சிறக்கலாம். இப்படி நோக்குங்கால், கோசலக் கோப்பெருந் தேவியர் இருவர்திறத்தில் வான்மீகர் உண்மையையும், கம்பர் மெய்ம்மையையும் முதலாகவைத்து அவர்தம்இயற்கை யுருவத்தைத் தீட்டுகின்றனர் என்னல்வேண்டும்.

மாதுட உறவில், மற்றவர் செய்தி எவ்வகை மாறினும், மாற்றவள் மாமி மருகி என்னுமிம் மூவர்தமுள் நிகழ்கின்ற மாருட்டம் எக்காலும் எவ்விடத்தும் யாவர்மாட்டும் ஒரு படித்தாய்த் தோன்றக் காண்கின்ருேம். மாற்றவட்கு வயிறு வாய்த்ததென்று தன் வயிற்றை இடித்துக்கொண்டவள் காந்தாரிஒருத்தியலள். ஒரே பாத்திரம் உடைப்பதன் கர்த்தா மாமியும் மருகியும் ஆவதற் கேற்றவாறு மண் கலமும் வெண்கலமுமாய் மாறித் தோன்றுவது ஓரிடத்திற் குரிய தென்னுமோர் செய்தியன்று. ஜார்ஜ் எலியட் என்னும் ஆங்கில நூலாசிரியர் வரைந்துள 'நாவல்' ஒன்றில், கைதவறி ஓர் சாடியைக் கீழிட்டுடைத்து விட்ட மருகியை அவள் மாமியாவாள் வாய்வந்தவாறு வைதுகொண்டே "இப்படியன்ருே சாக்கிரதையாகக் கையாளவேண்டும்" என்று காட்டுதற்கு வேருேர் சாடியை எடுக்குங்கால் அது அவள் கைதவறி விழுந்துடைதலும் "இந்தச் சாடிகளுக்கெல்லாம் இன்று விதிமாண்டது போலும்" என்று தேறினள் எனக் கூறப்பட்டிருக்கின்றது. மருகியுடைத்தபோது ஊழ்வலியின் திண்மையை அம்மாமியார் மறந்ததேனே. இம்மறதியும் அதனுள் அடங்கிய இகலும் மாமியின் உரிமை.

உலகவழக்கில் மாமி மருகி மாற்றவள் என்னும் மரபிற்குரிய வாய்பாடு வழுவாமல் வான்மீகி முனிவர் இயக்குகின்ருர். உள்ளதை உள்ளபடி உரைக்கும் ஆற்றல் இதுவென்று வியப்பதும் யாவர்க்கும் எளியதாகின்றது. முனிவரர் வகுத்தபடி அயோத்தி மன்னனுடைய மனைவாழ்க்கைச் சித்திரத்தைச் சிந்திக்குங்கால் மாநுடமயக்கத்தின் உண்மையே நன்கு புலப்படுகின்றது. இதனைப்போய் மாநுட இயற்கையின் மெய்ம்மை என எண்ணலாகாது.

கைகேசியின் மனத்தைக் கலக்கப்புகுந்த மந்தரை இயம்பியவைகளினின்று, இவ்வகைக்குரிய பற்பல அரிய இரகசியங்களைத் தெரிந்துகொள்ள இயலும்:—

"புத்தியையுடைய எவள்தான் யமனையொத்த சக்களத்தி குமாரனுடைய க்ஷேமத்தை மெச்சுவள்........ கௌசல்யை வெகு சந்தோஷமடைந்து 'அரசருடைய தாயார்' என்ற பட்டம் பெற்றுத் தனது சத்துருக்களை யெல்லாம் தன்கீழ் அடக்கிக்கொண்டு விளங்கப்போகின்

ளுள்............நீங்கள் உங்கள் அழகினுலுண்டான கர்வத்தால் கௌசலையை இதற்குமுன் அவமானஞ் செய்திருக்கின்றீர்; அவள்மட்டும் நல்ல பதவிக்கு வந்துவிட்டால் உங்களை ஏன் அவமானஞ் செய்யமாட்டாள்?

சக்களத்தி பிள்ளையின் கொடுமையைக் கூறியபாகம் முற்றிலும் கூனியின் கற்பனேயே எனக் கழிப்பினும், "பாரடீ என்னழகை" எனக் கைகேசி கோசலையின் முன் கொக்கரித்த புன்மையை என்னென்றுரைப்பது. தன் நாயகன், வெஞ்சினத் தவுணர்தேர் பத்தும் வெல்லுமாறு கோல்கொண்ட பஞ்சிமென் தளிரடிப் பாவையோ இப்பழி சுமந்த பாவியாவாள். "யான் அவ்வாறு என்றும் இழைத்திலேன்" என்று கூனியை மறுத்திலளாகையால் கோசலையைப் பலகால் இக்கைகேசி இளிவரக் கண்டிருத்தல் நிச்சயம். கூன்கொண்ட கயத்திக்கு அவ்வாறெல்லாங் கூறுதல் இயற்கையாகலாம், புறவொன்றின் பொருட்டாகத் துலைபுக்கபெருந்தகை தன் புகழில் பூத்த மாவேந்தன் தயரதற்கு மனைவியாயும், ஆயிரம் இராமரும் தன் கேள் ஆகவொண்ணுக் குணப்பெருங்குரிசில் பரதற்கு அன்னையாயும் அமைந்த கைகேசி இவைகளை, எல்லா மாதர்களையும் போல் ஏற்றுக்கொண்டாள் என்னும் உண்மை அவளுடைய இயற்கையின் மேன்மைக்கு மாறுபடதாயிற்றென்பதற்கையமில்லை. இனிக் கோசலையை நோக்குவோம்.

தயரதன் தந்த முடியைத் தாங்குபவன் இனித் தானல்லன் என்பது தெரிந்த இராமன், அன்னை கோசலையை அணுகி,

"அம்மா, இப்பொழுது வந்திருக்கும் பயம் இன்னும் நிச்சயமாகத் தெரியாது. இப்பயம் உமக்குஞ் சீதைக்கும் லக்ஷ்மணனுக்கும் அதிகமாகத் துக்கத்தைத் தரும். நான் தண்டகாரணியத்திற்குச் செல்லப் போகின்றேன். எனக்கு இந்த ஆசனம் எதற்கு? இனி நான் இருக்க வேண்டியது, நுனியோடு கூடிய இருபத்தைந்து தருப்பைகளாற் செய்த முனிவனுக்குரிய ஆசனத்திலன்றோ! நான் ரிஷிபோல் மாமிஸத்தை நீக்கிக் காய் கிழங்கு தேன் இவைகளை உணவாகப் புசித்துக் கொண்டு, மநுஷ்ய சஞ்சாரமற்ற காட்டில் பதினுன்கு வருஷம் வசிக்கப் போகின்றேன். மகாராஜர், பரதனுக்கு இளவரசுப்பட்டத்தைக் கொடுத்து என்னைத் தண்டகாரணியத்தில் ரிஷிபோல் வசித்திருக்கக் கட்டளையிட்டார்"

எனத் தன்பால் மிக இரங்கிய பரிவினேடு பகர்கின்ற மொழிகளும், "பங்கமில் குணத்து எம்பி, நின்காதல் திருமகன் பரதனே துங்க மாமுடி சூடுகின்றுன்...... யான் அருந்தவரொடு ஏழிருபருவங்கள் வனத்தின்கண் உறைந்து வருவன்" என்றியம்பிய நயமும் எத்தூரத்திற் கெத்தூரம் அகன்றிருக்கின்றன வென்பதை விளம்பவும் வேண்டுமோ. கான்சென்று ஊன் தின்பதற் கில்லையே என ஒரு இராமன் உயங்கினன் என்பது, வறுமை வந்துற்றவுடன் வயிற்றிற் கெவ்வுணவுவகையாகும் எனநினைக்கும் பொதுமக்கள் திறத்தில் உண்மையாகாமெனினும், யாரினும் உயர்ந்த அம் மேன்மகன்பால் மெய்ம்மையோ ஆகாது. இது கேட்ட கோசலையின் புலம்பலோபின்னும் பலபடிமலைதற்குரியதாகின்றது:—

"என் மைந்த, 'ராகவ, நீ எனக்குத் துக்கம் விளையும்படி பிறவாமலே இருந்தால், பிள்ளை பெறுத நான், பிள்ளையின்மையால் உண்டாகுந் துக்கத்தைவிட வேறு துக்கத்தைக் காணுமல் இருக்கலாம். பிள்ளாய், புத்திரப்பேறு அற்றவளுக்கு ஒரேதுக்கம்? அதென்ன வென்றால், புத்திரனில்லை என்பதுதான். அதைப்பார்க்கிலும் வேறு ஒரு துக்கமும் அவளுக்கில்லை. கணவருடைய அநுகூலத்தினுல் உண்டாகுஞ் சிறப்பையுஞ் சௌக்கியத்தையும் முன்னர் ஒரு பொழுதும் நான் கண்டதே இல்லை. ராமனுலாவது சுகத்தைக் காணலாமென்றுநினைத்திருந்தேன். எல்லாரினும் பெரியவளாக இருந்தும் ஒருநாளுஞ் சுகத்தையே கண்டிராத நான், கணவரின் கருத்தைக் கெடுக்கின்றவளும் என்னிலும் இளையவர்களுமான சக்களத்திகளுடைய மிகக் கொடிய வார்த்தைகளைக் கேட்கவேண்டியவளாகப் போகின்றேனே. இதைவிட ஸ்திரீகளுக்கு மிக்கதுயரை விளைவிப்பது என்ன இருக்கின்றது. எனது சோகமும் அழுகையும் என்றும் அளவிட அரியனவாய்க் கரையில்லாமல் இருக்கின்றன. நீ இங்கு இருக்கும் போதும் இத்துயரம் இருப்பினும், அதுஉன்னுல் மறைக்கப்பட்டிருந்தது. குழந்தாய், நீ புறப்பட்டுப் போனபின்பு உண்டாகுபவற்றைப்பற்றிச் சொல்லவேண்டுமோ? ஆகையால் எனக்கு மரணமென்பது நிச்சயம். பர்த்தாவினுல் அவமதிக்கப்பட்ட யான் தலைமையிழந்தேன். கைகேசியின் வேலைக்காரிகளோடு ஒத்தவளாகச்செய்யப்பட்டேன். அன்றி அவர்களுக்குத் தாழ்வானநிலைமையில்கருதப்பட்டேன். இதுவரையிலும் எனக்கு அடங்கிப் பணிவிடை செய்தவர்களும், பரதன் பட்டத்திற்கு வந்த பின்னர் என்னைப் பார்த்துப் பேசவும் மாட்டார்களே! புதல்வனே, கதியற்ற நான், எப்பொழுதும் மிக்க சினத்தோடு கடிந்துபேசுங் குணமுள்ள கைகேயியினது முகத்தை எவ்வாறு பார்ப்பேன்? உனக்கு உபநயனஞ் செய்த பின்னர் இந்தப் பதினேழு வருஷங்களாக, "எப்பொழுது என்னுடைய துக்கம் போகப் போகின்றது? எப்பொழுது உன்னுடைய பட்டாபிஷேகத்தை நான் காணப்போகின்றேன்" என்று காத்திருந்தேன். இவ்வளவு முதுமைப் பருவத்தை அடைந்த என்னுல், இந்தத் தீராத்துக்கத்தையும் சக்களத்திகளின் அவமதிப்பையும் இனி ஒரு கணமேனும் பொறுக்க முடியாது—......மிக்கதுக்கம் அடைந்த ஒருவர்தாம் விரும்பிய காலத்தில் மரணத்தை அடையக்கூடுமானுல், கன்றைவிட்டுப் பிரிந்து பசுவருந்துவதுபோல் வருந்தாமல் நான் இக்கணமே யமலோகஞ் சென்றுவிடுவேன். சந்திரனை ஒத்த முகத்தை யுடையவனே, நீ இன்றி இனி நான் பிழைத்திருப்பது வீண். வலியற்ற பசு தனது இளங்கன்றைத் தொடர்வதுபோல அன்பினுல் உன்னுடன் நானும் காட்டிற்கு வருகிறேன்.

இன்னபடி யொரு இளையவள் வீசிய மையல் வலைப்பட்டுத் துன்புறுத்துங் கிழக்கணவனது முதுமனைவியின் வாய்வரு புலம்பலைக் கேட்கவேண்டிய கூரை ஒரு சக்கிரவர்த்தியின் அந்தப்புர மாளிகை மேன்மாடமாவது பெரிதும் வருந்தத்தக்கதே. சுகமென்பது இதுகாறுந் தினையளவுங் கண்டதில்லையாம் கோசலை. வெண்ணெய் திரண்டெழும்போது தாழியுடைந்ததென்றுல் எவ்வாறு ஆற்றுவாள். தான் மாமிசம் சாப்பிடுதற் கில்லையே என்று இராமன் எவ்வளவுதான் தற்பரிவு தோன்ற விளக்கினுலும் கோசலையோ அதற்கொன்றும் இரங்கியதாய்க் காணவில்லை. எய்துதற்குத் தான் அங்காந்திருந்த 'சுகம்' இனி இல்லாமற்போவதுமன்றி மாற்றவள் கைகேசி முன்னிலையில் தன் கஷ்டங்கள் பின்னும் பதின்மடங்கு அதிகரிக்கு மென்னும் அச்சமே அவளை அலைத்தது. தனக்கு விஞ்சித்தான் தனயனும் என்பது சிறுமானுடர்க்குரிய உண்மை. எவ்வுலகும் ஈன்றுனை ஈன்றுனை ஈன்றுளுக்கு இது மெய்ம்மையாகாது.

இறுதியில், கன்று பிரிந்த பசுவினைத் தனக்கு ஒப்புக் கூறிய தொன்றே குலநலமிகுந்த கோசலைக்கு அமையும். முன்னதெல்லாம் மானுட உண்மைக்கு உடன்படப் பின்னதிதுவே அண்ணல் இராமன்தன் அன்னைக்கியன்றது என்று காட்டவே, நீரொழியப் பாலுண் குருகனைய கம்பர்,

பிறவு ரைப்பதென் கன்று பிரிந்துழிக்
கறவை யொப்பக் கரைந்து கலங்கினள்

எனச் செவ்விதின் வற்புறுத்தினர். உவமையை மாத்திரம் தான் எடுத்துக்கொண்டு, மற்றவைகளை விட்ட கொள்கையை, "பிற உரைப்பதென்" என்னும் வாக்கு ஐயமற வற்புறுத்துகின்றது.

வான்மீகர் நூலினுட் காண்பதுபோல் இலக்குமணன் இச்செவ்வியில் இராமனோடு கோசலையின் கோயிலுக்குக் கம்பர் நூலின்படி, போகவில்லை. நிகழ்வதை யறிந்த இளையோன் வீதிவாய்ச் சென்று நின்று இடிநிகர் நாணொலி எழுப்பி மூவுலகமும் ஒருங்கே தன்னுடன் போர்க்குவர அறைகூவிய நாடகத்திறம் கம்பர் நூலினுட் சிறக்கின்றது. வான்மீகர் நூலினுள், அன்னையு மைந்தனும் பரிந்துரையாடிக் கரைந்தபோது இலக்குமணன் அருகு நின்றனன். ஆதலான், தன் வில்லின் துணைதந்துதவிக் கோசலையின் துயரையும் தயரதனது ஆணையையும் மாற்றுவா னென்றவன் முழங்கிய மாற்றங்களை அவள் கேட்க நேர்ந்தது. கூறுவான் சுமித்திரை காதன்மைந்தன் :—

"......மனந்தடுமாறியும் முதுமைப்பருவ மடைந்தும் உலக இன்பங்களில் முழுகியு மிருக்கும் அரசர், மன்மதனுக்கு அடிமைப்பட்டிருக்கிறபடியால் எதைத்தான் சொல்லமாட்டார்......கைகேசியின் சொற்கேட்டு நமது தந்தை நமக்கே பகைவராயிருப்பராயின், இவரையுஞ் சத்துருவென்றே எண்ணி, விசாரியாமலே கொல்லவாவது கொல்லுவோம்; சிறையிலாவது இடுவோம்......... இராமரும் நீரும் எனது வலிமையைப் பார்க்கக் கடவீர்..."

கேட்டாள் இதனைக் கோசலை. உலர்ந்திருந்த அவளுள்ளத்தில் ஒரு சிறு நசை சுரந்தது போலும். வறண்ட ஆசைக்கு வலியதோர் துணை வாய்க்கின்றதென்னின் நீதியுந் தருமும் நிகரற்ற கற்பும் அசையுமென்பது மானுட இயற்கையின் உண்மையாகலாம். ஆதலால் வான்மீகி முனிவரால் இத்தகைய உண்மையுள் படுத்தப்பட்ட அக்கோசலை,

"இராமா, உன் தம்பி இலக்குமணன் சொன்னதைக் கேட்டாய்? அது உனக்கு நியாயமாக இருந்தால் அவ்வண்ணமே செய். என் சக்களத்தி அநியாயமாகத் தூண்ட அவளுடைய வார்த்தையைக் கேட்டுக்கொண்டு, என்னைப் பரிதவிக்க விட்டு நீ காட்டிற்குப் போவது நியாய மன்று. நீ தருமத்தை அறிந்தவனாய் அதன்வழியே நடப்பவனுமாக விருந்தால், இங்கேயே இருந்து எனக்குப் பணிவிடைகளைப் புரிந்துகொண்டு, மிகச் சிறந்த தருமங்களை நடத்திவா......பரிதவிக்கும் என்னை விட்டு நீ காட்டிற்குச் சென்றால், நான் இங்கேயே பட்டினி கிடந்து என் பிராணனை விடுவேன். அதருமத்தால் சமுத்திரராஜனுக்குப் பிரம்மகத்தி வந்தது போல, உலகத்தில் மிகப் பேர் பெற்ற நரகம் உனக்கு வந்துவிடும்"

எனச் சாற்றினாள். "இது உனக்கு நியாயமாக இருந்தால்........."என்று துவக்கியதிலுள்ள சிறு செம்மையும், அதுவே நியாயம் என்று பின்னால் அவள் வற்புறுத்திய வாசகங்களால் அழிந்து போயிற்று. 'மன்னனைக் கொல்லலாம்' எனக்குறித்த இலக்குமணனுக் குடன்பட்டு "இராமா, இதனை நீ செய்வதாயின் செய்" என்றனளாமெனின் கோசலையின் குணநலமென்னும். மாதர்களில் எத்தனையோ பலர் இந்நிலையில் இவ்வாறே இயம்பி இருப்பார் என்பது உண்மையே. எனினும் கம்பரோ, குலமாதற்கியற்கையின் மெய்ம்மையை,

ஆகி லைய வரசன் றுணையால்
ஏக லென்பதி யானுமு ரைக்கிலேன்

என்ற மாற்றத்தால் உலகிற் கலையுணர்வுள்ளவரையில் அழியாப்புகழுடன் நிலவுமாறு நிரந்தரமாக்கினர். வான்மீகத்திலேனும் கம்பர்நூலிலேனும், கைகேசியின் சூழ்ச்சியால் தானரசிழந்து காட்டிற் ககலநேர்ந்த தென்பதைக் குறிக்குஞ்சொல், இராமன் கோசலைக் குரைத்த வாசகத்தில் யாதுமிலது. எனினும், கோசலை உண்மையை உணர்ந்தாள் என்னக் கம்பர் காட்டாதிருக்க, வான்மீகத்தில் அவள் அதுவே காரணமாக இருத்தல் வேண்டும் என அயிர்த்தாளென ஊகித்தற்கிடமுளது. வான்மீகத்தின்படி, தயரதனது அரண்மனையினர் யாவரும் யாரையும் அன்புடன் நம்பி ஆதரித்ததாகத் தெரியவில்லை. இந்தச் சந்தேகம் இராமனைத்தான் சாராதிருந்ததோவென்னின் அதுவுமன்று. தன்னுடன் போதற்கு வற்புறுத்திய இலக்குமணனைத் தகைவானாய்,

"அரசராகிய நமது தந்தை இப்பொழுது மன்மதன் வலையில் சிக்கியிருக்கின்றார். அசுவபதியின் குமாரியாகிய அக்கைகேயியும் இத்தேசத்தை யடைந்த பின்னர், வருத்த மடைந்திருக்குந் தமது சக்களத்திகளுக்கு நன்மையை நடத்தமாட்டார். கைகேயியின் வசத்தில் நிற்கும் பரதனும் இராச்சியத்தை யடைந்த பிறகு மிக்க துக்கத்தை யடைந்த கௌசலையையும் சுமித்திரையையும் நினைக்கவும்மாட்டான். ஆகையால் நீ இவ்விடத்திலிருந்து கொண்டு சுயமாயாவது அரசனுடைய உதவியினாலாவது ஆர்யையான கௌசலையைப் பாதுகாப்பாய்"

எனக் காட்டிய காரணம், கைகேசிகிடக்க, பரதனுக்கேனும் இராமனுக்கேனும் பெருமையளிக்கத் தகுந்ததன்று. இவையனையவை சிறியனவே சிந்திக்கும் மாநுட இயற்கையின் மேற்புற உண்மையின்பாற்படும். மற்று, எவ்வாற்றானும் இலக்குமணனது உடன்போக்கைத் தடுக்கக்கருதி இராமன் உரைத்ததோர் பொய்யாயின் இது, அவன் நெஞ்சறிந்ததாயிருத்தல் வேண்டும். பன்னருங் குணத்தனாய் இராமனின் நல்லன் எனக் கோசலையாலேயே மதிக்கத்தக்க பரதனைத் தந்திரத்திற் கிலக்காகியவோர் பெரும் பழிக்கு ஆளாக்குவது தகைமையாகுமா. பரதனது அற்றம் பார்த்து அரசளிக்கக் காத்திருந்த சூழ்ச்சியோன் தயரதனுக்கேற்ற மகன் இவ்விராமன்.

யாரிடத்துங் குடிகொண்டிருந்த இச் சங்கைத்தீ சீதையையுஞ் சுட்டது. கொண்கனோடு கானகம் ஏக நின்ற தன் மருகியை நோக்கிக் கோசலை, வரைந்துகொண்ட மணாளனை வறுமையுற்றகாலத்தும் வழிபடலொழியாமையே குலமாதர் தருமமெனப் பலபடி செவியறிவுறுத்தி,

"முதலில் சுகமனுபவிப்பதும், அற்பமான கஷ்டம் நேரிடினும் கணவனை நிந்திப்பதும் அவனைக் கைவிடுவதும் ஸ்திரீகள் இயற்கை.........ஆகையால் காட்டுக்குப் போகின்ற என் குமாரனான இராமனை நீ அலட்சியஞ்

செய்யாதே. கணவன் செல்வம் படைத்தவனுக இருந் தாலும் பணமற்றவனுக இருந்தாலும், அவன்தான் உனக்குத் தெய்வம்''

எனத் தெருட்டினளென்பர் வடநூன் முனிவர். சீதா பிராட்டிக்குச் சென்ருெரு மாமியாவாள் கோசலை கற்பின் திறமுரைத்துக் கணவனைக் கைவிடேல் எனத்தெருட்டுவதே ஆற்றரிய நிந்தனையை ஒக்கும். கோசலை ஸ்திரீகளின் இயற்கையைப்பற்றி யுரைத் தது, இல்லானை இல்லாளும் வேண்டா இவ்வுலக நடையில் நாம் காண்கின்ற அளவு உண்மையாகலாம். மற்றது மானுடப்பெருமையின் மெய்ம்மையைச் சார் தலரிது.

இயற்கைக்கியன்ற உண்மையென்ற பேரால், ஆங் கிலக் கலையாராய்ச்சியாளர் ஆஸ்கார் வைலட் என்பர் உரைத்தவண்ணம் தயரதப் பெருந்தகையைச் சூழ்ந் துழக்கிய இவ் 'வெண்ணுத்தி வாழ்க்கை'ச் சித்திரத் தைக் கம்பர் பெருமான் அடியுடன் கலைத்துவிட்டு மெய்ம்மையிற் கலையெனுங் கோல்தோய்த்துத் தீட் டிய சித்திரமோ, உயர்வினே டுயர்ந்ததென்று உரைக் கலாம்.

யாப்பிலக்கணம்

தொடை—எதுகை

[357-வது பக்கத்தொடர்ச்சி]

முதற்சீரின் முதலெழுத்தோடு மற்றச்சீர்களின் முத லெழுத்து ஒன்றிவரின் அது மோனைத்தொடை யாம் என முன்னர்க் கூறினேம். இனி எதுகை என் பது யாதெனக்காண்போம்.

முதற்சீரின் இரண்டாவது எழுத்தோடு மற்றச் சீர்களின் இரண்டாவது எழுத்து ஒன்றி வருமாயின் அதனை எதுகைத்தொடை என அழைப்பர். மோனை யும் எதுகையும் அமையப்பெற்ற செய்யுளே சிறப் புடைத்து என முன்னர்க் கூறினேம். இவைகளில், செய்யுளின்கண் உள்ள பல அடிகளின் ஒவ்வொரு அடியிலும் உள்ள முதலெழுத்து ஒன்றிவருதல் ஒரு வகை மோனையாகும் என்றும், அடிதோறும் முதல் நிற்கின்ற எழுத்து வேறுவேறு ஆனாலும், ஒவ்வோ ரடியின் முதல் நிற்கின்ற எழுத்தோடு ஒன்றி அவ் வடியிலேயே வேறோர் சீரின் முதல் எழுத்து நிற்றல், மற்றோர் வகை மோனையாகுமென்றும் இதன்முன் கூறப்பெற்றிருக்கின்றது. இவையிரண்டில், அடிமுத லோடு அடிமுதல் ஒன்றிவருகின்ற மோனையைக்காட் டிலும், ஓரடியின் கண்ணே முதற்சீர் முதலெழுத் தோடு மற்றோர்சீரின் முதலெழுத்து ஒன்றிவரும் மோனையே செய்யுள்களுக்கு இன்றியமையாததாகக் கருதப்படுகின்றதென்றுங் கூறினேம். எதுகையின் திறத்தில் இது மாறியிருக்கின்றது.

செய்யுள்களுக்கு எதுகை வேண்டப்படுவதே. ''தீண்டாமல்'', என்பது ஒரு செய்யுளடியின் முதற் சீராயின், அதற்கு 'ஈண்டிவரும்' என்பது எதுகை யாய்வரும். அல்லது 'பாண்டவரும்,' 'பூண்டதொரு போன்று ணகரமெய்யை இரண்டாவது எழுத்தாக வுடைய சொற்கள் எதுகையாகக்கூடும். இப்படியே, பைந்தார்— ஐந்தூர் ஙைந்தான், மைந்தா, முதலியன, இரண்டாமெழுத்து நகரமெய்யாகி எதுகையாயின. அவ்விரண்டா மெழுத்து மெய்யாகத்தான் இருக்க வேண்டுமெனும் நியதியில்லை. வாரணம் - நாரதன் - தாரணி - வீரமும் - இவைகளில் ரகர உயிர்மெய் இரண்டா மெழுத்தாய் ஒன்றி நின்ற எதுகையாயின. எழுவாய் - மழுவாய் - தழுவா - தொழுவர், - இவை களில் இரண்டாமெழுத்து ழுகர உயிர்மெய்யாய் நின்று எதுகையாயின. ஒன்று நினைவிற் கொள்ள வேண்டும். இரண்டாமெழுத்து ஒன்றுவதுடன் முத லெழுத்தும் அளவொத்து இருத்தல் வேண்டும். எனவே, 'தூதர் என்பதற்கு 'மாதர்' என்பது எது கையாகக் கூடுமேயன்றி, 'மதர்' என்பது எதுகையாக முடியாது.

வஞ்சியை யெங்குங் காணுத்
துயரிடை மறந்தா னென்னச்
செஞ்சிலை யுரவோன் தேடித்
திரிகின்ரு னுள்ளந் தேற
அஞ்சொலா ளிருந்தாள் கண்டேன்
என்றயான் அரக்கன் கொல்லத்
துஞ்சின ளென்று சொல்லத்
தோன்றினேன் தோற்ற மீதால்.

[இராவணனுல் கொல்லப்பட்ட மாயாசீதையைக் கண்டு அனுமன் நினைந்தது]

இதனில் அடிதோறும் முதலெழுத்துக் குறிலா யிருக்க அதற்கடுத்த எழுத்து ஞகரமெய் எதுகை யாக ஒன்றி வருதல் காண்க.

மாதா வும்நம் சுற்றமு நாடு மறையோரும்
ஏதா னுரோ என்று தளர்ந்தே யிறுவாரைத்
தாதாய் காணச் சாலநினைந்தேன் தரையாள்வேம்
போதா யையா பொன்முடி யென்னைப்புனைவிக்க.

[பிரமாஸ்திரத்தால் கட்டுண்டு கிடந்த இலக்குமணனை நோக்கி இராமன் புலம்பியது]

இதனில் அடிதோறும் முதலெழுத்து நெடிலாக இருக்க, அதற்கு அடுத்த எழுத்துத் தா என்பது ஒன்றி எதுகையாக வருதல் காண்க. அடிதோறும் முதலெழுத்து ஒன்றி வருவதை அடிமோனை என்பது போல அடிதோறும் இரண்டாமெழுத்து ஒன்றி வரு வதை அடியெதுகை என்பர்.

ஒரே எழுத்து இவ்வண்ணம் ஒன்றி வருவது மல்லாமல் சிற்சிலபோது அவை சிறிது வேறுபட்டு எதுகையாவதுமுண்டு.

ஒரே எழுத்தன்றி, அவ்வெழுத்தின் வருக்கத்தைச் சேர்ந்த மற்ற எழுத்துக்களும், அல்லது அதன் இனத்தைச் சேர்ந்த மற்ற எழுத்துக்களும் எதுகை யாகலாம்.

பொறுத்தல் இறப்பினை யென்று மதனை
மறத்தல் அதனினு நன்று

இதனில், றகாரமும் றகரமும் வேருயினும், அவை இரண்டும், ற று றி றீ...என்ற ஒரே வருக்கத்தைச்

சேர்ந்தவைகளாதலால் எதுகை ஆயின. இப்படி வருவதை வருக்கஎதுகை என்பர்.

ஏகித் தனிசென் றெதிரெய் தலுறும்
காகுத் தனையெய் தியகாலை யின்வாய்
வேகத் தொடுவீ ரர்விசைத் தெழலும்
ஓகைப் பொருளுண் டெனவோ தினனால்.

இதனில், கி, கு, க, கை, என ஒருவருக்கத்தைச் சேர்ந்த வேறு வேறு எழுத்துக்கள் எதுகையாக வந்திருக்கின்றன. எவ்வாறு வரினும் அவை அளவொத்து இருத்தல்வேண்டும். எனினும்,

ஆயிர வாயிர கோடி யாய்வரும்
தீயுமிழ் கடுங்கணை மனத்திற் செல்வன
பாய்வன புகுவன நிருதர் பல்லுயிர்
ஓய்வன நமன்றமர் கால்க ளோயவே

என்னு மிதனில், முதலிரண்டடியில், யிகரமும் யுகரமும் வருக்கம்பற்றி எதுகையாயது போலவே, அவைகளோடு பின்னிரண்டடிகளிலுள்ள யகரமெய்யும், அரைமாத்திரை யுடையதாயினும், முன்னுள்ள ஒரு மாத்திரையுடைய யிகர யுகரங்களுக்கு வருக்க எதுகையாகும்படி அமைவதும் உண்டு.

வருக்க எழுத்துக்கள் அல்லாமல், மோனையைப் போல், ஒரே இனத்தைச் சேர்ந்த எழுத்துக்களும் எதுகையாக வரக்கூடும். இதனை இன எதுகை என்பர்.

ஒருமையு ளாமைபோ லைந்தடக்க லாற்றி
னெழுமையு மேமாப் புடைத்து.

இதனில், ரு கரத்திற்கு ழுகரம் எதுகையாய் வந்தது. அவையிரண்டும் இடையினத்தைச் சேர்ந்தவை. இப்படியே,

தீயினாற் சுட்டபு ணுள்ளாறு மாறாதே
நாவினாற் சுட்ட வடு.

இதனில், இடையினத்தைச் சேர்ந்த யகர வகரங்கள் எதுகையாயின.

கணைகொடிது யாழ்கோடு செவ்விதாங் கன்ன
வினைபடு பாலாற் கொளல்.

இதனில், மெல்லினத்தைச் சேர்ந்த ணகர னகரங்கள் எதுகையாயின.

காட்சிக் கெளியன் கடுஞ்சொல்ல னல்லனேன்
மீக்கூறு மன்ன னிலம்.

இதனில், வல்லினத்தைச் சேர்ந்த ககர டகரங்கள் எதுகையாயின.

சிற்சிலபோது, வருக்கத்தாலேனும் இனத்தாலேனும் ஒன்றாத காலத்திலும் உயிரின் ஒற்றுமையால் ஒன்றி ஒலிப்பதாலும் எதுகையாகலாம்.

அணுவைத் துளைத்தேழ் கடலைப் புகட்டிக்
குறுகத் தறித்த குறள்.

இதனில், ணுகரமும் றுகரமும், ஒரு வருக்கத்தைச் சேர்ந்தனவுமல்ல, ஓரினத்தைச் சேர்ந்தனவுமல்ல. எனினும், அவ்விரண்டு உயிர்மெய்களிலும் உள்ள உயிர் உகரமே யாதல்பற்றி இவைகளை எதுகையாகக் கொள்வர். இப்படி வருவது உயிரெதுகை என வழங்கப்படும்.

இனி, இரண்டா மெழுத்துக்கள், ஒன்றாமலும், வருக்கம் இனம் உயிர் முதலிய உறவினால் ஒத்திராமலும் போயினும், அவை நெடில்களா யமைவதுபற்றியும் எதுகையாகலாம்.

ஆவா வென்றே யஞ்சின ராழா வொருசாரார்
கூகூ வென்றே கூவிளி கொண்டா ரொருசாரார்
மாமா வென்றே மாய்ந்தனர் நீந்தா வொருசாரார்
ஏகீர் நாகீ ரென்செய்து மென்றா ரொருசாரார்

இதனில், வாவும் கூவும், இனம் வர்க்கம் உயிர் என்னும் ஓர்வகையிலும் ஒவ்வாமலிருப்பினும், அவையிரண்டும் நெடில்களாதல்பற்றி எதுகையாயின. அப்படியே பின்னிரண்டடிகளிலும், நெடில்கள் என்னுந் தன்மையில், மாவும் கீயும் எதுகைகளாயின.

இவைகளின்றி, சிலவிடங்களில் இரண்டாவதெழுத்து ஒன்றாத காலையிலும், அதற்கடுத்த மூன்றாம் எழுத்து ஒன்றுவதும் எதுகையெனக் கருதப்படுகின்றது :—

பொய்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
நன்மை பயக்கு மெனின்

இதனில் இரண்டா மெழுத்துக்களாகிய யகரமெய்யும் னகரமெய்யும் ஒரு விதத்திலும் ஒவ்வவில்லை. எனினும், அவைகளுக்கு அடுத்த மை என்னும் எழுத்து ஒன்றி எதுகை ஆகின்றது.

பவழமும் பொன்னுங் குவைஇய முத்தின்
திகழரும் பீன்றது புன்னை.

இதனில், இரண்டா மெழுத்து உயிரினால் பொருந்துவதுடன் மூன்றாம் எழுத்தாகிய ழவும் ஒன்றி எதுகை ஆயிற்று.

இனி, முதலெழுத்திற்கும் எதுகையாக வருகின்ற இரண்டாம் எழுத்திற்கும் இடையில் ய் ர் ல் ழ் என்னும் மெய்யெழுத்துக்களில் ஒன்று நின்றாலும் ஓசை ஒத்து ஒலித்தலால், எதுகை கெடுவதில்லை.

மெய்ப்போதினங்கைக் கணியன்னவள்மென் பளிங்கில்
பொய்ப்போது தாங்கிப் பொலிகின்றதன் மேனிநோக்கி
இப்பாவையெங்கோற் குயிரன்னவ ளென்னவுன்னிக்
கைப்போதி னோடு நெடுங்கண் பனி காரநின்றாள்.

இதனில், முதலிரண்டடிகளில், இரண்டாவது எழுத்தாக யகரமெய் வந்தாலும், அதற்கயலிலிருக்கும் பகர மெய் மற்றெல்லா அடிகளிலுமுள்ள இரண்டா மெழுத்தோடு ஒன்றி எதுகையாவதுகாண்க. இதனை யகர ஒற்றிடை வந்த ஆசிடை எதுகை என்பர்.

எந்தைநின் னருளினா லிடரி னீங்கியே
உய்ந்தன னடியனே னென்ன.........

இதனிலும் யகரமெய் இடையில் ஆசாக வந்தது.

மாக்கொடி யானையு மௌவற் பந்தரும்
கார்க்கொடி முல்லையுங் கமழ்ந்த மல்லிகை

இதனில், ரகரமெய் இடைவந்தும், ககரமெய்யோடு ககரமெய் ஒன்றி எதுகையாயிற்று. இது ரகர வொற்றிடைவந்த ஆசிடை எதுகை.

ஆர்கலி உலகத்து மக்கட் கெல்லாம்
ஓதலிற் சிறந்தன் றொழுக்க முடைமை.

முதலடியுளுள்ள இரண்டா மெழுத்தைவிட்டு எண்ணினால், லி என்னும் மூன்றா மெழுத்துத்தான், அடுத்த அடியில் மூன்றா மெழுத்தாயிருக்கின்ற லி என்பதுடன் ஒன்றி எதுகை ஆகின்றது. இதற்குமுன் இருக்கின்ற ககர தகரங்கள் உயிரினால் ஒத்திருக்கின்றன. முதலடியில் ரகரமெய் ஆசாக இடை வந்திருக்கிறது.

வாழ்கின்றோ மென்று மகிழன்மின் வாணாளும்
போகின்ற பூளையே போன்று.

இதனில் ழகரமெய் இடையில் ஆசாக வந்திருக்கின்றது. எதுகை எழுத்து கி என்பதே. ஆசு என்னும் சொல்லிற்குச் சேர்ப்பது என்பது பொருள்.

ஆவே றுருவின வாயினும் ஆபயந்த
பால்வே றுருவின அல்லவாம்—பால்போல்
ஒருதன்மைத் தாகு மறநெறி ஆபோல்
உருவு பலகொள லீங்கு.

இதனில், இரண்டாமடியில், லகரமெய் ஆசாக இடை வந்திருக்கின்றது.

இந்த, யகர ரகர ழகர லகரங்களன்றி, மற்றுஞ் சில ஒற்றெழுத்துக்களும் ஆசாக இடை வருதல் கூடும். எனினும் இவை மிக அருமை.

இனிச் சில இடங்களின், எழுத்துக்குறி இல்லாக் காலையிலும் ஒலியின் இயைபுபற்றி எதுகை நயம் அமையக் கூடும். ஐ, என்னும் எழுத்தில் யகரத்தின் ஒலி எழுந்து தோன்றுவதால், ஓரடியின் முதலில் உள்ள ஐகாரமே, மற்ற அடியிலுள்ள இரண்டா மெழுத்து யகரத்திற்கு எதுகையாய்விடுவதுண்டு!

உய்யா னுயர்கோ சலைதன் னுயரோ
அய்யா வினையோ ருயிர்வாழ் கிலரால்
மெய்யா வினையெண் ணிடுவித் தகொடுங்
கைகே சிகருத் திதுவோ களிரே

இதனில், ஈற்றடி முதலிலுள்ள, கை யென்னும் எழுத்தினலேயே, மற்ற அடிகளில் இரண்டாவது எழுத்தாக இருக்கும், யகரமெய்க்கு எதுகை ஏற்பட்டது காண்க. சிலர், கய்கேசி என்று எதுகைக்காகத் திரித்து எழுதுவதுண்டு அது மிகை. இப்படியே.

கைநெரித்து வெய்துயிர்ப்பக் கால்தளர்ந்து
[மெய்பனிப்ப
மையரிக்கண் நீர்ததும்ப வாய்புலர்ந்தாள்—

இதனில், முதலடியின் முதலிலுள்ள யகர ஒலியே, இரண்டாமடியின் இரண்டாமெழுத்தாகிய யகரத்திற்கு எதுகையாயிற்று. இதனை ஒலிஎதுகையென நாம் அழைக்கலாம்.

இதுகாறும் சொல்லிவந்தது அடி எதுகை. அதாவது, செய்யுளின் வேறுவேறு அடிகளின் முதற்சீரின்கண் எதுகைஅமைவது. இனி, இவ்வண்ணமே, ஒரே அடியின்கண், பலசீர்களின் இரண்டாமெழுத்து ஒன்றியும், வருக்கம் இனம் முதலியவைகளாலும், ஆசிடையிட்டும் எதுகை அமையக்கூடும்.

கஞ்சங்களை மஞ்சன்கழல் நகுகின்றது கண்டாள்.

என்னும் அடியில் முதற்சீரும் இரண்டாஞ்சீரும் எதுகை பெற்றிருக்கின்றன.

கங்குல்வந்த திங்களன்ற கங்களங்க மில்லையே

இதனில் முதல் மூன்று சீர்களிலும் எதுகை அமைந்திருப்பது காண்க.

வஞ்சியென நஞ்சமென வஞ்சமகள் வந்தாள்

இதனில் முதல்மூன்று சீர்களின் இரண்டாமெழுத்து ஒன்றியும், நான்காஞ் சீரில் இனவெழுத்துப் பெற்றும் எல்லாச் சீர்களும் எதுகைகொண்டு தொடர்ந்தன. இப்படி எல்லாச் சீர்களும் எதுகையாயினல் அதனை முற்றெதுகை என்பர்.

வண்மையின் வரம்பு.

ஒரு சிறு கதை

மருத்துவ முறைகளோடு நீதிநூல்களுங் கற்றுத்தேர்ந்த வைத்தியரொருவர் மிக்க தருமசிந்தையுடையவராய் வாழ்ந்திருந்தார். இவர் ஒருநாள், தெருவில் காலுடைந்த ஒரு நாயினைக்கண்டு இரக்கங்கொண்டு தன்மனை கொணர்ந்து வேண்டிய சிகிச்சைகளைச்செய்து வெளிவிடுத்தனர். அப்புறம் இதனைப்பற்றி இவர் நினைத்தவரும் அல்லர். ஆனல் சில தினங்களுக்குப்பின் ஒருநாட் காலையில் இவர் கதவு திறந்து வெளிவந்தபோது, அந் நன்றியுடைய நாய் மிகவும் பொறுமையோடு அவருக்குக் காத்திருப்பது காண வியப்பும் மகிழ்வும் எய்தினர். இம்மகிழ்வை இருமடியாக்கக் கருதியதென்ன அந்நாய் தன்னோடு வேறோர் நாயையும் அழைத்துக்கொண்டு வந்திருந்தது. இந்நாயின் காலொன்று சிதைவுற்றிருக்கக் கண்டு அப்பொருந்தகை வைத்தியர் உடனே அதற்கும் வேண்டிய சிகிச்சைகளைச் செய்தனுப்பிவிட்டு, "என்னே, இறைவன் பெருமை, என்னே இறைவன் கருணை! இந்த நாய்ப்பிறவிகளுக்கும் நன்மைசெய்வதற்கு எனக்கு இத்திவ்விய சந்தர்ப்பம் தந்ததற்கு நான் எவ்வாறு ஏற்றபடி துதிக்கப்போகின்றேன்" என நிரம்பிய மனத்தோடு நின்றதுமன்றி, இந்நாயினளவேனும் மனிதர் ஒருவர்க்கொருவர் உபகாரஞ் செய்யவேண்டுமென்னும் விருப்பமுடையவராயிருந்தால் உலகம் இந்நாள் எத்தனை உத்தமகதி அடைந்திருக்கும் என்று ஏங்கினர். "வருந்திவந்தோர் அருந்துயர் களைந்து, தனக்கென வாழாப்பிறர்க்குரியராய் இருக்கவேண்டு மென்னும் நீதியை நான் நூல்களில் கற்றிருப்பதாலன்றோ முதலில் ஒரு நாய்க்கு உதவிசெய்யவேண்டுமென்னும் நற்புத்தி எனக்கு வந்தது. அதனலன்றோ இன்னெருநாயும் இன்று என்னல் தன்னருந்துயர் தீரப்பெற்றது......" என் றின்னபல எண்ணியெண்ணிப் பரமனருளைப் பரவிய மனத்தரானர்.

கதை இதனோடு முடியவில்லை. இரண்டாம் பாகம் உடனே தொடரும்.

மறுநாட்காலையில், நன்றிபொலியும் நாயின் முகமிரண்டு தன் வீட்டுவாயிலில் நீட்டக்கண்டார். இவைகளோடு இன்னும்இரண்டு நாய்கள் இருந்தன—முடங்கள். இப் புதுமுடங்களுக்கும் சிகிச்சைசெய்தபின் நான்கு நாய்களும் வந்தவழி சென்றன. நம் வைத்திய வள்ளல் மனத்தில் முன்னினும் பன்மடங்கு உவகை சிறந்தது. அந்நாள் கழிந்து மறுநாள் விடிதலும், அவ்வாயிலண்டை, சீர்திருத்தஞ்செய்யப்பட்ட பழையநாய்கள் நான்கினோடு சீர்திருத்தம் அடையவேண்டிப்புதிய நாய்கள் நான்கு உட்கார்ந்திருந்தன. அவைகளுக்கும் செய்வன செய்து அனுப்பினர். அத்தினம் கழிந்து மறுதினம் புலர்ந்தது. இப்பொழுது நாய்கள் பதினாறு; அவைகளில் எட்டு புதுப்புண்கள் உடையன. பன்னிரண்டுமணி வரையிலும் வைத்தியருக்கு வேலை தீரவில்லை. எனினும், பக்தி சிரத்தையோடு, வைத்தியர் மனத்தில் "இந்தநாய்களெல்லாம் நாசமாய்ப்போக" என்றோர் சாபம் இன்றைக்குத் தோன்றித் தோன்றி மறைந்துகிடந்தது. மறுநாள் உதயமான கதிரவன் காட்டிய நாயின் கணக்கு முப்பத்திரண்டு—அவைகளில் பதினறு நாய்களுக்குக் காலில் காயம். காயம் பட்ட நாய்களின் கதறலும் குணமடைந்த சுணங்கன்களின் குதூகலமும் கூடி அத்தெருவிலிருப்போர் காதுகளெல்லாம் செவிடுபட்டன. வைத்தியர் நல்லவர், தன்னுடைய உதவிக்கு இன்னும் இரண்டு வைத்தியர்களை அமர்த்திக்கொண்டு இருட்டுவதற்குள் காரியத்தை ஒருவாறு முடித்தார். ஆனல் அவர் வாயினுள் முணுமுணுத்துக்கொண்டிருந்த மொழிகளைத் தும் கடவுளின் கருணையைத் துதித்தவைகளோ என்பதுதான்சந்தேகம். எல்லாவற்றிற்குமோர் எல்லையுளது. அடுத்தநாட்காலையில் வாயிற்படியண்டை வந்தார். கண்ணுக்கெட்டியவரையின் நாயின்கூட்டம். அதனில் பாதி முடம் என்பது நிச்சயம். பார்த்தார் பாவம் அந்த வைத்தியர்; பதைத்தார். "முட நாய்களுக்குக் கடன் செய்த மடையன் யான். நீதிநெறி நூலைப் படித்து மோசம்போனேன். இதைஇனி மறுத்தேன், மறைத்தேன்—கொண்டுவா குண்டாந்தடியை—வரம்புகடந்துவிட்டது" என்றோடி ஆயுதத்தைக் கொண்டவராய் வெளிவரும்போது, வழியில் நின்றது வலக்காலை முன் வைக்காமல் முதல்நாள் நுழைந்த அப்பழைய நாய். வருகின்ற வேகத்தில் இவ்வைத்தியர் அந்நாயின் மீது இடறவும் அது திரும்பி இவருடைய காலைக் கடித்துவிட்டது.

ஒருமாதத்திற்கப்பால், நாய்க்கடி பைத்தியத்தால் சாகக்கிடந்த அவ்வைத்தியர், அழுதவராய்ச் சூழ்ந்திருந்த உறவினர் நண்பர்களை அருகழைத்து, "புத்தகங்களை நம்பாதீர்கள். அவை தருமத்தின் முதற்பாகத்தையே சொல்கின்றன. இரண்டாம்பாகத்தைச் சொல்வதில்லை. உங்களை நாடிவருகின்ற ஒருவனுக்குச் செய்த உதவி என்னபயன் விளைக்குமோ என்னும்சந்தேகம்உங்களுக்குண்டானல்அந்தச்சந்தேகத்தை உங்கள் சார்பாகவே தீர்த்துக்கொண்டு அவனைக் கொன்றுவிடுங்கள்" என்று மெல்லியகுரலில் சொல்லிக்கொண்டே சுவரின்பக்கமாகத் திரும்பித் தன் ஆவியைவிட்டார்—இந்தக்கதை கற்பிப்பது என்னவென் றெண்ணுகின்றீர்.

— லோத்ரா —

ஸ்திரீகளுக்கு

மகிழ்ச்சியையும்

ஆரோக்கியத்தையும் தரும்.

— அம்ருதா —

இரத்தத்தைச் சுத்தி செய்யும்.

— அர்கா —

ஜுரத்தைப் போக்கும்

எல்லா மருந்துக்கடைகளிலும் கிடைக்கும்.

கேசரி குடீரம்

இந்திய கெமிஸ்ட் & டிரக்கிஸ்டு.

எழும்பூர். :: :: சென்னை.

சுகவாழ்வு

நாம் நமது நாட்டில் சுகமாக வாழவிரும்பினால் வியாதிகள் என்னும் சத்துருக்களுக்கு இடங்கொடாமல் நமது தேகத்தைப் பாதுகாத்துக் கொள்ளவேண்டும். நீங்கள் தேக அசதி, மலச்சிக்கல், நரம்புகளின் தளர்ச்சி, ஞாபகமின்மை, மூத்திர சம்பந்தமான வியாதிகளால் கஷ்டப்பட்டால் உடனே,

ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்

உபயோகியுங்கள். தேகத்தை வஜ்ர சரீரமாக்கி வைரக்கற் கோட்டையைப் போல் பாதுகாக்கும் 32 மாத்திரைக ளடங்கிய டப்பி 1க்கு ரூபா 1

இனம்! இனம்!!

போஜன விதி

உடனே விலாசத்தைத் தெரிவியுங்கள்.

ஆதங்க நிக்ரஹ ஔஷதாலயம்,

26, பிராட்வே,

மதராஸ்.

Estd. NATIONAL 1906

INSURANCE COMPANY LIMITED.

Head Office:- NATIONAL INSURANCE BUILDINGS
7, Council House St, Calcutta.

PHENOMENAL PROGRESS

Because it
Offers all that is best in Life Assurance on account of
Lowest Premium Rates
Large Bonuses
Liberal Policy Conditions
Sympathetic treatment of Policyholders.
Prompt Settlement of Claims.

Comparatively Considering

This Company's position has not been equalled by any other Indian Life Office.
Agents wanted in unrepresented areas.
For Particulars apply to :—

113, Armenian St, Madras. } **T. ANANTACHARI**, B.A., *Branch Secretary.*

- பாரதி -

சுதந்திரம் — சமத்வம் — சகோதரத்வம்.

ஓர் தேசிய மாதப் பத்திரிகை.

மூன்றாவது ஆண்டு நடக்கின்றது.

உள் நாடு வருட சந்தா ரூ. 2 0 0
வெளி நாடு ,, ரூ. 2 8 0

தனி (சாம்பிள் காபி) பிரதி விலை அணா 5 வேண்டுவோர் ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

ஜாதிமத கட்சி பேதங்களின்றித் தேசவிடுதலைக்காக உழைக்கும் தேசிய மணம்கமழும் பத்திரிகை.

ஆசிரியர்:—R. நாராயணசாமி.

விலாசம்:—நவீன பாரதி ஆபீஸ்,
உத்தமபாளையம், மதுரை ஜில்லா.

கலா நிலயம் 1930-வது வருடக் கலாநிலயக் கட்டுரைகள்

அறியாமை வேண்டப்படும் - கட்டுரை 4. சுயநலச்சோதனை 8. விஷயத்திற்கேற்ற விளம்பரம், மூயலுக்கு மூயல வேண்டா, நல்லோர்கடன், எத்தைக்கண்டு இச்சைகொள்வோம், அலையடங்கக் காக்கவேண்டா, தர்க்கத் தளர்ச்சி, கல்லாதபேர்களே நல்லவர்கள் 4.வண்டிமாடும் மாட்டுவண்டியும் 3. சகுனியின் மரபுதான் சாய்வதில்லையோ, உரிமையாற்பெரியாராகார், நாணத்தால் நைவார்திறம், மால்வாலியோவின்மரபு மாய்ந்ததில்லையோ, மானமழிந்தபின், மண் காற்று, பேயச்சில் பிள்ளையாரோ, தலைகீழ்கணக்கு, பள்ளியிற் பழுத்தபழம், கள்வரும் காவலும், பொன்னெழுத்தாற் பொறிக்கலாமோ, அரக்கராற்றல், சுண்டெலி ஆற்றல், வாவின்நீளம், பெருமையின்பெருமை 2. இவை தலையங்கங்கள் இவைதவிரக் கம்பராமாயணம் - அயோத்தியாகாண்டம், குறுந்தொகை - உரையுடன் நம்மாழ்வார் வைபவம், மானதசாத்திரம் தமிழ்ப்பாடம் (புணரியல்முழுதும்) மொழிபெயர்ப்புக்கட்டுரைகள், மலர்வனம், பழமுதிர்சோலைமாதவி மாதவம் ஆய பல சிறந்த கட்டுரைகள். வேண்டுவோர் சீக்கிரம் எழுதவும். தபால் செலவு உள்பட

தோல்பயிண்டு உள்நாடு 10-0-0 வெளிநாடு 11-8-0.

கலாநிலயம், வேளாளர் தெரு, புரசைவாக்கம், சென்னை.

ANCIENT JAFFNA

BY

Mudaliar C. RASANAYAGAM C.C.S.

FOREWORD

BY

Professor S. KRISHNASWAMI AIYANGAR, M.A.

An authentic History of North Ceylon, particulary of Jaffna, based on archeological Epigraphic and Linguistic researches is stated here for the first time in a connected logical manner from ancient times up to the occupation of the island by the Europeans. The progress of civilisation in Ceylon and Southern India and incidently in other countries associated with them as brought out here reads like a romance without infringing on the Cannons of Historic Research. The Honest patriotism of the author is inspiring without misleading.

Every student of History would read this book with pleasure and profit,

Price Rs. 5-8-0 (V.P. Charges extra)

"KALANILAYAM"

VELLALA STREET,

Purasawalkam, MADRAS.

நோயற்ற : : : : வாழ்வே

ஆரோக்கிய வாழ்க்கைக்கேற்ற இரு அருமருந்துகள்

குறைவற்ற : : செல்வம்

"ஸித்தகல்ப மகரத்துஜம்"

(ரிஜிஸ்டர்ட்)

தேகத்திலுள்ள கொடியவியாதிகளை நீக்கி இரத்தசுத்தி செய்து, நரம்புகளைப் பலப்படுத்தி மூளைக்கு ஞாபக சக்தியையும் தேகத்திற்குப் பலத்தையும் அளிப்பதில் இம் மருந்து ஒப்புயர்வற்றது. இவ்வரிய ஒளஷதத்தின் பெருமையைப் போற்ருத வைத்தியர்களே யில்லை. தேக ஆரோக்கியத்தைப் பெருக்கி வாழ்நாட்களை வளரச்செய்யும் சக்தி இம்மருந்தில் நன்கு அமைந்திருக்கிறது. ஒரு புட்டி மருந்தே தேகத்தை வலுப்படுத்தவும், ஜீவசக்தி, ஞாபக சக்தி பெறவும் போதுமானது. மூளையைக் கொண்டு பிழைப்பவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம்.

60 மாத்திரைகள் கொண்ட புட்டி ரூபா **10**

"மஹா சந்தனாதித் தைலம்"

ஒப்புயர்வற்ற இத்தைலம் மூளைக்குப் பலத்தை அளித்து ஞாபக சக்தியை வளர்ப்பதிலும் நரையை நீக்கி, கூந்தலைக் கருமையாகவும் மழமழப்பாகவும் வளர்ச்சி செய்து அறிவையும் ஆற்றலையும் வளர்ப்பதில் பெயர்பெற்றது. கபால உஷ்ணம், மறதி மனச்சோர்வு, மயக்கம் மந்தப் பார்வை, தலைவலிபோன்ற நோய்களைப் போக்கி ஆனந்தத்தை அளிக்க வல்லது. மூளையைக் குளிர்ச்சி செய்து மனோரம்மியத்தை வளர்க்கும் இத்தைலம் ஆயிரக் கணக்கானவர்களால் போற்றப்பட்டது. ஒரு முறை உபயோகித்துப் பார்த்தால் இதன் அபாரசக்தியும் பெருமையும் நன்கு விளங்கும்.

1 மாதத்திற்கு உபயோகிக்கக்கூடிய 12 அவுன்ஸ் புட்டி விலை ரூபா **5**.

உங்கள் நரம்புகளையும், தேகத்தையும் பலப்படுத்தவும், ஞாபக சக்தியைப் பெறவும், நோய்களிலிருந்துவிடுதலையடைந்து ஆரோக்கிய சுயராஜ்யத்தைப் பெறவும் சுலபமான வழி,

ஆயுர்வேத ரத்ன பண்டிட் டாக்டர் N. V. ஸ்ரீ ராமாசார்லு அவர்களின்

இணையற்ற ஒளஷதங்களிலேயே இருக்கின்றது. அவைகளை உபயோகித்து இன்ப வாழ்வு நடத்தச் சிறிதுந் தயங்காதீர்கள்.

மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட் சென்னை.

தபால் பெட்டி 151, சென்னை. கேட்லாக் இனம். தந்தி விலாசம் 'கல்பம்' சென்னை.

மானேஜர்.—வி. ரகுபதி, B.A. B.L. ஏஜண்டுகள் தேவை. விவரத்திற்கு எழுதவும்.

இனம்! இனம்!!

வைத்திய வித்தியா

யௌவனம் என்னும்பொக்கிஷத்தையும்ஆரோக்கியமென்னும் குன்ருத செல்வத்தையும் விரும்பும் ஒவ்வொரு ஸ்திரீயும் புருஷனும் இப் புத்தகத்தை வாசித்துச் சுகமடையலாம்.

மதனமஞ்சரி பார்மஸி,

1/94, சைனு பஜார், மதராஸ்.

வித்வான் த. சண்முகக் கவிராயரின்

:: மகா பாரதம் தமிழ் வசனம் ::

திருத்தமான உயர்ந்த பதிப்பு

இது சிறந்த கிளேஸ் காகிதத்தில் நன்குஅச்சிடப்பட்டு கலிகோ பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

(1) ஆதிபர்வம் ரூ. 3. (2) சபா, ஆரணிய, விராட பர்வங் அடங்கியது ரூ. 5. மற்ற பர்வம் அச்சில்.

பாலவிநோதினி ஆபீஸ், 323, தண்டையார்ப்பேட்டை,

வண்ணரப்பேட்டை போஸ்ட், மதராஸ்.

வர்த்தமானம்

ஐரோப்பாவுக்கு அழிவு காலம்:—கவுண்ட் கீசர்லிங் என்ற ஸ்பெயின் தேசத்து அறிஞர், ஐரோப்பாவுக்கு அழிவு காலம் நெருங்கிவிட்டதென்று கூறுகின்றார். பழங்காலத்து ரோமர்கள் தங்கள் அழிவுகாலத்தில் புதுப்புதுத் தெய்வங்களை உண்டுபண்ணினார்கள். அவ்வாறே இப்போது ஐரோப்பாவில் உள்ளவர்கள புதிய புதிய யந்திரங்களையும் கொள்கைகளையும் சிருஷ்டித்துக் கொண்டிருக்கிறார்கள். இது ஐரோப்பிய நாகரீகத்திற்கு அழிவுகாலம் நெருங்கிவிட்டதென்பதை விளக்குகிறதென்று அவர் கூறுகின்றார்.

***

மீனெண்ணெய்:—சென்ற மாதத்தில் நடந்த பிரிட்டிஷ் நேஷனல் பேபி வீக் கவுன்சிலில் காட்லிவர் ஆயில என்ற மீன் எண்ணெயைப்பற்றி ஒருவைத்திய சாஸ்திரநிபுணர் பின்வருமாறு கூறியிருக்கின்றார்:—

“அதனால் (காட்லிவர் ஆயிலால்) குணமாகிற குழந்தைகளை விடச் சாகிற குழந்தைகளை அதிகமாகக் கண்டிருக்கிறேன். அது குழந்தைகளின் ஜீரண சக்தியைப் பெரிதும் கெடுத்து அதனால் விஷம் போல வேலை செய்கிறது”.

***

157 வயது மனிதர்:—157 வயது சென்ற துருக்கிக் கிழவரான சாரா ஆகா அமெரிக்காவிலிருந்து லண்டனுக்குப் போயிருக்கிறார். சில காலம் இங்கிலாந்தில் தங்கியிருந்துவிட்டு அவர் துருக்கிக்குச் செல்வார்.

“நான் மது அருந்துவதில்லை, புகை குடிப்பதும் இல்லை. நான் மரக்கறி உணவே சாப்பிடுகிறேன். சைவ உணவே எனக்குச் சாலவும் பொருத்தமா யிருக்கிறது. ஒருத்தி பின் ஒருத்தியாக எனக்குப் பதினாறு மனைவியர் இருந்தனர். அவர்களெல்லாம் காலமாய் விட்டார்கள். இப்பொழுது கடைசியாக உள்ள மனைவியை நாலு வருஷத்திற்குமுன் கலியாணஞ் செய்தேன். எனக்கு 36 பிள்ளைகள் இருந்தார்கள். எனது தகப்பனார் 101 வயது வரை வாழ்ந்திருந்தார். எனது தாயார் 75 வயதில் காலமானார்.

நான் 1773-ல் பிறந்தேன். நான் பிறந்த காலத்தில் ஜனனக்கணக்கு கிடையாது. அது ஏற்பட்டபொழுது நான் ஒரு சர்ட்டிபிக்கேட் வாங்கிக்கொண்டேன். துருக்கியில் 125 வயதுக்கு மேற்பட்டவர்கள் 500 பேருக்கு மேலே யிருக்கிறார்கள். நான் எல்லோரினும் அதிக வயதுள்ளவன். அதனால் நான் கட்டணமின்றி நாடெங்கும் யாத்திரை செய்ய அதிகாரிகள் உத்தரவு கொடுத்திருக்கின்றார்கள். எனது காலத்தில் பன்னிரண்டு சுல்தான்கள் அரசாட்சி செய்திருக்கிறார்கள். நான் அதிகமாக நடக்கின்றேன். நான் (அமெரிக்கா) நியூயார்க்கில் நாள்தோறும் இரண்டுமைல் தூரம் நடப்பது வழக்கம். நான் இன்னும் பல வருஷங்கள் வாழ முடியுமென்று நம்புகின்றேன். வைத்தியர்கள் எனது உடல் அமைப்பு அற்புதமாயிருக்கின்றதென்றும் எனது இருதயம் உறுதியாக வேலை செய்கிறதென்றும் எனக்கு எத்தகைய நோயும் இல்லையென்றும் சொல்லுகிறார்கள்” என்று சாராஆகா சொல்லுகிறார்.

சாரா ஆகாவின் காதுகள் நாலரை அங்குலம் நீளம் இருக்கின்றனவாம். பிலடால்பியா வைத்தியர் ஒருவர் சாராவின் காதுகளை தாம் கண்ட காதுகளில் மிகவும் பெரியவை யென்று சொன்னாராம். சாரா ஆகா ஆறு யுத்தங்களில் சேர்ந்து சண்டையிட்டிருக்கிறார். நெப்போலியனுக்கு விரோதமாக அவர் சிரியாவில் சண்டையிட்டார். ஆறு முறை காயமடைந்திருக்கிறார். நூறு வருஷத்திற்கு முன் நடந்த சண்டையில் வேலை செய்ததற்காகத் துருக்கி அரசாங்கத்தார் இன்னும் அவருக்குப் பென்ஷன் கொடுத்து வருகிறார்கள்.

***

டாக்டர் டாகூருடைய சாந்திநிகேதனத்தில் ஆங்கில பாஷைப் போதகராயிருக்கும் அமெரிக்க கனவான் எளிமையான வாழ்க்கையின் சிறப்பைப்பற்றி ஒரு பத்திரிகை நிருபரிடம் கூறியதாவது:—

ஒருவன் எளிய வாழ்க்கை நடத்துவது அமெரிக்கருக்கும் பிரிட்டிஷாருக்கும் பிடிப்பதில்லை. நான் இந்தியருடை தரிப்பதைக் கண்டு எனது ஆங்கில நண்பர்களும், அமெரிக்க நண்பர்களும் வியக்கின்றனர்.

மேனாட்டுப் பழக்கவழக்கங்களைக் கைப்பற்றித் தங்களுடைய தெல்லாவற்றையும் தியாகம் செய்ய எத்தனையோ இந்தியர் தயாராகவிருக்க ஆங்கிலேயனாகிய நான் இந்திய நடையுடைபாவனைகளை ஏற்றுக்கொண்டதன் காரணமென்னவென அறிய இந்தியாவிலுள்ளவர்களும் விரும்புகிறார்கள். இந்தியாவில் இடுப்பு வேஷ்டியும் இலேசான பாதரட்சையும் மேலுக்கு ஒரு சால்வையும் இருந்தால் போதும். ஆயிரக்கணக்கான வருஷங்களாக சீதோஷ்ண நிலை அநுபவத்தை உத்தேசித்து இவ்வித உடையை அவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். இந்தச் சீதோஷ்ண நிலைக்கு இவ்வுடையே ஏற்றதாயினும் மேனாட்டார் தங்கள் ஜாதிப் பெருமையை முன்னிட்டு இவ்வுடையை இங்கு அணிவதில்லை.

வெள்ளைக்காரர் ஒருவர் இந்திய உடை உடுத்துக் கொண்டால் பிரிட்டிஷாரில் பெரும்பான்மையோரின்மனம் அதனால் புண்பட்டுவிடுகின்றது. அவ்விதம் செய்துவிட்டால் வெள்ளைக்காரரின் உயர்வான தன்மையை இந்தியர் மதிக்காமலிருந்து விடுவார்கள் என அவர்கள் நினைக்கின்றனர். ஸ்ரீ காந்தி உலகத்தில் இந்தக் காலத்தில் பாரமார்த்திக வழியில் நன்கு ஒழுகுபவராக விருக்கிறார். சில அம்சங்களில் அவர் இயேசுவின் உபதேசங்களை இன்னும்விரிவுபடுத்தித் தக்கவாறு வியாக்யானம்செய்திருக்கின்றார். இவ்விதம் செய்வதற்கு இயேசுவுக்கு நேரமும் சந்தர்ப்பமும் இல்லாமற் போயிருக்கக் கூடும். இந்தநெருக்கடியான சமயத்தில் காந்திகொள்கையும் போல்ஷ்விக் கொள்கையும் உலகத்தைப்பற்றியிருக்கின்றன. ஆனால் இவை யிரண்டும் ஒன்றுக்கொன்று நேர் முரணானதாகும். போல்ஷ்விக் கொள்கை வகுப்பு பேதத்தை ஆதரிக்கிறது. காந்திக் கொள்கை அன்பை வளர்க்க முயல்கின்றது. காந்தி அடிகள் இப்போது லண்டனுக்கும் பிறகு அமெரிக்காவுக்கும் விஜயம்செய்யப்போவதால் பெரியதொரு மாறுதல்உலகத்தில் ஏற்படப்போகின்றதென்று நான் நிச்சயமாய்க் கூறுவேன்.

KALANILAYAM. REG. NO. M, 2324.

:: பிரபல ஜோதிஷர் ::

மஹாராஜாக்களாலும், ஆயிரக்கணக்கான பிரபுக்களாலும் தங்கமெடல்களும் நற்சாட்சிப்பத்திரங்களும் பெற்றவர். ஒரு ஜாதகம் கணிக்க ரூ. 2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ. 5. ஒரு வருஷ பலன் எழு ரூபா 5. எதிர்காலத்தைப் பற்றின 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8 (ஜாதகம் அல்லது எழுதும் நேரம்தேவை) (ஜ்யோதிட ஞானபோதினி விலை அணா 8. பண்டித காழியூர்,

ம. ஸ்ரீநிவாஸாசாரியார்,
218 தங்கசாலை வீதி, மதராஸ்.

கலா நிலய முன்னைய இதழ்கள்

மூன்றாண்டு இதழ்களும் பயிண்டுசெய்தும் செய்யாமலும் கிடைக்கும்

முதல் ஆண்டு:—ராமாயணம்—பால காண்டம், அகப்பொருள் வரலாறு, காந்தார நாட்டுக் கட்டழகி எனும் சிறந்த நாவல், மலர் வனம், பழமுதிர்சோலை, தமிழ்ப் பாடம், கண்ணப்ப நாயனர் சரித்திர ஆராய்ச்சி, முதலிய பல அரிய கட்டுரைகள்.

இரண்டாமாண்டு:—அப்பர் தேவார ஆராய்ச்சி, நாவல், ஆங்கிலக் கட்டுரை மொழிபெயர்ப்பு, கம்பராமாயணம்—பால காண்டம், அகப்பொருள், தமிழ்ப் பாடம் ஆய பல அரிய கட்டுரைகள்.

மூன்றாமாண்டு:—கம்பராமாயணம்—அயோத்தியா காண்டம், மானத சாத்திரம், குறுந்தொகை (உரையுடன்) ஸமஸ்கிருத நாடக மொழிபெயர்ப்பு. அனைய பல கட்டுரைகள்.

தோல் பயிண்டு—விலை உள்நாடு ரூ. **10—0—0**, வெளிநாடு ரூ. **11—8—0**.

(தபால் சார்ஜ் உள்பட.)

விலாசம்:—

கலா நிலயம், புரசைபாக்கம், சென்னை.

அகராதிகள்.

தமிழ்ச்சொல் அகராதி (3 பாகம்) ரூ. 18—0—0

காரநேஷன் அகராதி (தமிழ்-தமிழ்-ஆங்கிலம்) 10—0—0

தமிழ்-தமிழ்-ஆங்கிலம் வி. விச்வநாத பிள்ளை இயற்றியது. 676 பக்கங்கள் கொண்டது. ஒவ்வொரு சொல்லுக்கும் நேரான தமிழ் ஆங்கில மொழி பெயர்ப்பும் கொண்டது. 6—0—0

கலா நிலயம்,
புரசைவாக்கம், சென்னை.

டாக்டர் எம். ஸி. நஞ்சுண்டராவின் இணையற்ற மருந்துகள்.

எம். ஸி. என். ஸ்நானத் தைலம்.

இது ஸ்நானத்திற்காகவே தயாரிக்கப்படுவது. இதில் சேர்ந்துள்ள மூலிகைகளும், எண்ணெயும் சாஸ்திரீயமானவை. தலை நோய்கள், கண்களில் ஏற்படும் சில வியாதிகள், உடம்பில் ஏற்படும் வலிகள் இதை உபயோகித்து வர ஒழிந்துபோம். காலஞ்சென்ற டாக்டரின் சிறந்த ஸ்நானத் தைலம் இதுவே. வக்கீல்கள், மாணவர்கள், மூளையைக் கொண்டு பிழைப்பவர்கள் முதலியவர்களுக்கு இது ஓர் வரப்பிரஸாதம். மூளையைக் குளிரச் செய்து ஞாபகசக்தியை வளர்ப்பதில் ஒப்புயர்வற்றது. விபரகாட்லாக் இனம்.

6 அவுன்ஸ் புட்டி விலை ரூ. 1-0-0

எம். ஸி. என்ஸ். எக்லிக்டிக்
பார்மஸி & டிஸ்பென்ஸரி,
49, சிங்காராச்சாரி தெரு, திருவல்லிக்கேணி மதராஸ்.

எம்மிடம் கிடைக்கும் புத்தகங்கள்

1. குலசேகர ஆழ்வார் அருளிய பெருமாள் திருமொழி:—மூலமும், பு. பா. இரத்தினசபாபதி நாயக்கர் எழுதிய பதவுரை, விசேடவுரை, சரித்திரக் குறிப்பு, இலக்கணக் குறிப்புடன் கூடியது. விலை மார்பில் ரூ. 1-0-0; காலிகோ ரூ. 1-4-0.

2. அகத்திய முனிவர் அருளிய ஆறெழுத்து அந்தாதி:—முருகக் கடவுளை உபாசனை செய்வதற்குரியதாய் ஷடாக்ஷரத்தின் வைபவத்தை அகத்தியரே பாடியுள்ளார் என்று கருதலாகும் நூறு செய்யுள் கொண்டது. டாக்டர் V. S. அருணசலம் பிள்ளையின் உரையுடன் விலை அணா 12.

3. கம்பராமாயணம்-பாலகாண்டம்:—T.N. சேஷாசலம் ஐயர் பதிப்பு. கவியின் சொற்கொண்டே பாட்டின் பொருளைத் தெரியும் வண்ணம் உரைவரையப்பட்டுளது. அரும்பதவுரையும் விசேஷக் குறிப்புகளும், சேர்க்கப்பட்டிருக்கின்றன. விலை ரூ. 2-8-0.

4. ஏமாங்கதத்திளவரசன்:—ஸ்ரீமான் T. N. சேஷாசலம் ஐயர் B.A. B.L. எழுதியது. இலக்கிய நயம் துலங்குமோர் காதற் கதை. விலை ரூ. 1-0-0.

5. முருகன்—ஓர் உழவன்:—ஸ்ரீமான் K. S. வெங்கடரமணி M.A. B.L. ஆங்கிலத்தில் வரைந்த நாவல் நூல். ஸ்ரீமதி கிருஷ்ண குமாரி தமிழில் மொழி பெயர்த்துள்ளார். விலை ரூ. 1-8-0.

6. திருக்குறள்:—மார்க்க சகாயம் செட்டியார் பதிப்பு. திருக்குறளை ஆராய விரும்புவோருக்கு மிகவும் உபயோகமானது. விலை அணா 12.

கலா நிலயம் ஆபீஸ், புரசைவாக்கம், சென்னை.

Printed at the B. N. Press, Mount Road and Published by Mr. E. Kumariah, B.A., B.L. (Editor)